# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 | இதழ் 13 | 6 ஏப்ரல் 1970 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


**மாசேதுங் சிந்தனை**

தொழிலாளி வர்க்கமும், உழைப்பாளி மக்களும் துப்பாக்கிப்பலத்தை கொண்டு தான் ஆயுதமேந்திய பூர்ஷுவா வர்க்கத்தையும் நிலப்பிரபுக்களையும் தோற்கடிக்க முடியும் என்று ஏகாதிபத்திய சகாப்தத்தின் வர்க்கப் போராட்ட அனுபவம் நமக்குப் போதிக்கின்றது. இந்த அர்த்தத்தில், துப்பாக்கிகளால்தான் உலகம் முழுவதையும் மாற்ற முடியும் என்று நாம் கூறலாம்.

### யூகோஸ்லாவியா - உலக வங்கி - மகோவலித் திட்டம் - யு.என்.பி.

# மக்கள் கண்ணில் மண்தூவ முடியாது

**மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் இலங்கையை உலக வங்கிக்கு மேலும் அடகு வைத்ததை மூடிமறைப்பதற்காக யு.என்.பி. சரியான தந்திரம் ஒன்றைக் கையாள்கிறது. அதாவது, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நாடான யூகோஸ்லாவியா ஒரு "சோஷலிஸ" நாடென பாசாங்கு செய்கிறது.**

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் பிரதமரின் இல்லத்தில் நடந்த பத்திரிகை நிருபர்களின் மாநாடொன்றில், பிரதமர் டட்லி, யூகோஸ்லாவியா உலகவங்கியிடமிருந்து கடன் பெறவில்லையா என இங்கு வந்திருந்த நிருபர் ஒருவரைக் கேட்டார். அதற்கு அந் நிருபர் ஆம் என்று பதிலளித்ததுதான் தாமதம், அது ஒரு நல்ல காரியம்தானே என்று கேள்வியுடன் குறிப்பிட்டார் பிரதமர். மறு விநாடி அங்கிருந்த பிரதமரின் நிருபர் ''சோஷலிஸ நாடு (?) ஒன்றுடன் மகாவலித் திட்டத்திற்கான ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கையில், நாம் ஏகாதிபத்தியவாதிகளுடன் சதி செய்கின்றோம் என குற்றஞ் சாட்டுகிறார்கள்'' என்று கூறினாராம்.''

முக்கூட்டு முன்னணியினருக்கு தாக்க வேண்டிய இடத்தில் தான் தாக்கிவிட்டதாக பிரதமர் சற்று மகிழ்ச்சியடையலாம். உண்மையில், முக்கூட்டு முன்னணியினரைத் தாக்குவதற்கு ஒரு சரியான ஆயுதமாக இதனை பிரதமர் கையாண்டுள்ளார், இந் நிலை ஏற்படக் காரணம் என்ன? யூகோஸ்லாவியாவை ஒரு ''சோஷலிஸ'' நாடு என முக்கூட்டணியில் உள்ள சகல கட்சிகளும் வாயாரப் புகழ்ந்து பிழையான நிலையில் வீழ்ந்துள்ளதுதான் இதற்குக் காரணம்.

யூகோஸ்லாவியாவின் ''சோஷலிஸத்தை'' மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டாகிய நாம் மட்டுமே தோலுரித்துக் காட்ட முடியும். யூகோஸ்லாவியா ஒரு சோஷலிஸ நாடல்ல. அது அமெரிக்கா, அல்லது பிரிட்டன் போன்ற நாடு தான். யூகோஸ்லாவியாவின் பொருளாதாரத்துக்கு முட்டுக் கொடுப்பது அமெரிக்க, பிரிட்டிஷ் மூலதனங்களே. இந்நிலையில் யூகோஸ்லாவியா உலக வங்கியில் அங்கம் வகிப்பதும், அதிலிருந்து கடன் பெறுவதும் ஆச்சரியத்திற்குரியதல்ல. மகாவலித் திட்டம் சம்பந்தமான ஒப்பந்தத்தை யூகோஸ்லாவியாவுக்கு அளித்தது, அமெரிக்க, பிரிட்டிஷ் மூலதனத்தின் ஒரு துணைவனுக்கு அளிப்பதேயாகும். இந்த ஒப்பந்தத்தை யூகோஸ்லாவியாவுடன் செய்துகொண்டதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள உலக வங்கி எதிர்ப்புக் காட்டாததற்கும் இதுதான் காரணம். யூகோஸ்லாவிய கம்பெனியான ''இங்ரா''வின் இலங்கை பிரதிநிதியாக இருப்பவர் யு. என். பி. யின் முக்கிய தலைவர் ஒருவரின் நெருங்கிய உறவினராகும். பெயர்ப் பலகை யூகோஸ்லாவியா, அதற்குப் பின்னால் உள்ள மூலதனமோ அமெரிக்க-பிரித்தானிய ஏகேபாகவாதிகளின் பணமாகும்.

இத்தாலியில் உள்ள ஏகபோக கம்பெனியான பியட் ஸ்தாபனம் சோவியத் யூனியனில் பியட் கார்களை உற்பத்தி செய்யும் உரிமையைப் பெற்ற போது, உண்மையில் [illegible]ந்ததும் இதுதான். சோவியத் யூனியனில், தான் மேற்கொண்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பியட் கம்பெனி அமெரிக்க வங்கிகளிடமிருந்து பெரும் தொகையான பணத்தைக் கடன் வாங்கியது. சோவியத் மண்ணில் கார் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவியவர்கள் இத்தாலிய ஏகபோகவாதிகள்; அதற்கான முதலீடோ அமெரிக்கப் பணம்.

அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுக்கு முற்று முழுதாக தான் சரணடைந்ததை மறைப்பதற்காகவே யூகோஸ்லாவியா ''சோஷலிஸ''ப் பெயர்ப் பலகையைத் தொங்க விட்டுக்கொண்டிருக்கிறது. இதனால் ஒருவரும் ஏமாறக் கூடாது. யூகோஸ்லாவியாவின் தலைவனான டிட்டோவை முக்கூட்டணியில் உள்ள சகல கட்சிகளும் வாயாரப் புகழ்ந்ததினால் தான் முக்கூட்டணியினருக்கு மறுத்துப் பேச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. யூகோஸ்லாவிய ''சோஷலிஸம்'' சமசமாஜக் கட்சின் மனதுக்குப் பிடித்த சரக்காகும். இந்த ''சோஷலிஸத்தை'' டட்லி சேனநாயக்காவும் புகழ்ந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் யூகோஸ்லாவியாவிலிருந்து பல நன்மைகளைப் பெற்றுள்ளனர். திருமதி பண்டாரநாயக்கா வைத்திய சிகிச்சைக்காக இருமுறை அந் நாட்டுக்குச் சென்றுள்ளார். கெனமன் திரிபுவாதக் கும்பலோ, குருஷ்சோவ் ஆட்சிக்கு வந்த பின்னர் சோவியத் யூனியனின் குண்டாந்தடிக்கு அடிபணிந்து யூகோஸ்லாவிய ''சோஷலிஸத்தை'' போற்றிப் புகழ்ந்து வருகின்றது. அவர்கள் வளர்த்த கடாவையே பிரதமர் அவர்கள்மீது ஏவி விடும்போது, அவர்கள் செய்வதறியாது திணறுகின்றார்கள். வாய்மூடி மௌனியாக அவர்கள் சிந்திப்பதற்கும் அதுவே காரணமாகும். ஆனால், நாமோ பிரதமருக்கு தகுந்த பதில் அளிக்கும் நிலைமையில் உள்ளோம்.

மகாவலி திட்ட ஒப்பந்தம் யாருக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினை பற்றி யூகோஸ்லாவிய ''இங்ரா'' கம்பெனிக்கும், வேறொரு பிரெஞ்சுக் கம்பெனிக்கும் இடையில் இழுபறி நடந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். மந்திரிசபையில் உள்ள சக்திமிகுந்த கோஷ்டிகள் இந்த இரு கம்பெனிகளில்

— 8-ம் பக்கம் பார்க்க

**அறிவிப்பு**

அடுத்த வாரம் 'தொழிலாளி' வெளிவராது. மகத்தான லெனின் நூற்றாண்டு நினைவு தினத்தை யொட்டி 21 - 4 - 70ல் 'தொழிலாளி' விசேஷ இதழாக அதிக பக்கங்களுடன் வெளிவரும்.

உங்களுக்குத் தேவையான பிரதிகளுக்கு முன்னதாகப் பதிவு செய்யுங்கள்.

— நிர்வாகி

## தோழர் கே. குலவீரசிங்கம் அமரரானார்



நீலவானிலிருந்து பேரிடியொன்றுவீழ்ந்ததுபோல தோழர் கே.குலவீரசிங்கம் காலமானார் எனகடந்த 28ந் திகதி அதிகாலையில் பரவிய செய்தி இந் நாட்டு உழைக்கும் மக்களையும், புரட்சிகர தொழிலாளர் வர்க்கத்தையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினரும், இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொருளாளருமான தோழர் குலவீரசிங்கத்தின் பூதவுடல் கடந்த 28ந் திகதி கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வெள்ளவத்தை சுவர்ணவீதியிலுள்ள அவரது இல்லத்துக்கு தொழிலாளர்களும், கட்சித் தோழர்களும், பந்துக்களும் புடைசூழ எடுத்துவரப்பட்டது.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமைத் தோழர்களும், கட்சியின் தலைமைத் தோழர்களும், தொழிலாளர்களும், தொழிற்சங்க ஊழியர்களும், நண்பர்களும், பகுதி மக்களும் அவரது இல்லத்திற்கு வருகைதந்து தோழர் குலவீரசிங்கத்துக்கு தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

வெள்ளவத்தை நெசவாலையைச் சேர்ந் தொழிலாளர்கள் திரண்டுவந்து தமது தலைவனுக்கு, தோழனுக்கு தமது பாட்டாளி வர்க்க மரியாதையைச் சமர்ப்பித்தார்கள்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் காரியாலயத்துக்கு 29ந் திகதி தோழர் குலவீரசிங்கத்தின் சடலம் கொண்டுவரப்பட்டது. இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின்

— 2-ம் பக்கம் பார்க்க

நம்மைச் சுற்றி — நவம்

# வோட்டுக்காக தமிழரசாரின் பழைய பித்தலாட்டப் பல்லவி

தேர்தல் நெருங்கி வருவதைக் கண்டதும் பாராளுமன்ற மோகமுள்ள சகல கட்சிகளும் மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், குசுகுசுக் கூட்டங்கள் நடத்துவதிலும் தேர்தல் வேலைகளிலும் சுறுசுறுப்பாக முனைந்துள்ளன; கூட்டங்களில் மக்களை ஏமாற்றும் பிரசாரங்களும் அவிழ்த்துவிடப்பட்டுள்ளன. பிற்போக்கு பத்திரிகைகள் தமது வர்க்கமான யு என்,பிக்கு ஆதரவான பிரச்சாரத்தில் இப்போதே இறங்கிவிட்டன, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இதில் முழுக் கவனமும் எடுக்கப் போவதாகத் தெரியவருகிறது. சினிமா முதலாளிகளும் தமது படமாளிகையில் அரசாங்க செய்திப்படங்களைத் தவறாது காட்டி யு.என்.பிக்கு ஆதரவான பிரசாரத்தை இதுவரை செய்துவந்தாலும், மேலும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகிருர்களாம்.

இவற்றையெல்லாம் எதிர்பார்த்ததுதான். யு. என். பி. மட்டுமல்ல, இதர கட்சியினரும் தங்களுடைய பிரசார சாதனங்களை முழு மூச்சுடன் முடுக்கிவிட முனைந்துள்ளனர். எதைச் சொல்லியாவது, எதைச் செய்தாவது பாராளுமன்றத்துக்குள் நுழைந்துவிட வேண்டும் என எண்ணும் சகல கட்சியினரும், அவற்றின் அபேட்சகர்களும் தமது திருவிளையாடல்கள் முழுவதையும் நடத்தியே தீருவர். தாம் கைவிட்ட கொள்கைகளை-செத்துப்போன கொள்கைகளைக்கூட-உயிர்ப்பித்து எவ்வித மானவெட்கமுமில்லாது மேடையில் முழக்குவர். மக்கள் மடையர்கள்; தமது ஏமாற்றுகளுக்கெல்லாம் எடுபடுவர் என்பதில் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

இந்த, நம்பிக்கையில் தமிழரசுக் கட்சி முன்னணியில் நிற்கிறது. கட்சியின் தலைவர் ஃபாதர் செல்வநாயகமே தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள கொள்கைகளை சில நாட்களுக்கு முன்பு பத்திரிகைகளில் வெளியிட்டியிருந்தார். இந்த விஞ்ஞாபனத்தில் புது விஷயங்கள் ஒன்றுமில்லை, (இருந்தால் அல்லவா சொல்வதற்கு?) சமஷ்டி, மொழி யுரிமை, இந்தியா வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை, தமிழ்ப் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தைத் தடுத்தல் போன்ற பழையசரக்குகள் தான் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ளன. தமிரசுக்கட்சி தோன்றிய காலத்திலிருந்து கடந்த பொதுத்தேர்தல்வரை அது இந்தக் கொள்கைகளையே ''முழக்கி'' வந்ததையும் 65ல் யு. என். பி. யுடன் வர்க்கத் தோழமை பூண்டு அரசாங்கம் அமைத்தவுடன் தமிழரசுத் தலைமையே தனது கொள்கைகளைக் குழியில்போட்டு புதைத்துவிட்டதையும் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை. சமஷ்டி பற்றிப் பேசக்கூடாது என்ற டட்லியின் கட்டளையை தமிழரசு மந்திரி திருச்செல்வம் பணிவோடு ஏற்று வாய்மூடிக்கொண்டிருந்ததும், மொழியுரிமை பற்றிக் கூரைமுகட்டிலிருந்து கொக்கரித்தவர்கள் வேகமாக கீழே இறங்கி சிங்களத்தை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டதும், தமிழ் அரசாங்க ஊழியரை சிங்களம் படிக்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டதிலிருந்து திடீர்க்குத்துக் காரணம் ஒன்று அடித்து சிங்களத்தைப் படிக்கும்படி கூறியதும், இந்திய வம்சாவழியினர் பற்றிய பிரச்சினையில் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தை ஆதரித்து வாக்களித்ததும், தமது கொள்கைகள் ஒன்றுக்கேனும் விட்டுக்கொடுக்காத யு. என். பி. யின் அமைச்சர்களையும் தலைவர்களையும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரவழைத்து அங்கு உள்ளம் மகிழ்ந்து அவர்களைக் கட்டித் தழுவி ஆடம்பர-கோலாகல வரவேற்புகளையும் விருந்துகளையும் நடத்தியதும் தமிழரசுக் கொள்கைகள் பிணமாகிவிட்டன. என்பதை ஊர்ஜிதப்படுத்தி விட்டன. ஆனுல் இப்போது அந்தப் பிணத்துக்கு உயிர் கொடுத்து தேர்தலில் ஓடவிட முயற்சிக்கிருர்கள். 65க்கு முன் தமிழ் மக்கள் இந்தக் கொள்கைளுக்கு எடுப்பட்டதுபோல் இப்போதும் எடுபடுவர் என்பது தமிழரசாரின் நினைப்பு. கடந்த ஐந்து வருடகாலமாக இந்தக் கொள்கைகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டால், தமது வழக்கமான வாதங்களை—மேலும் சரியாகச் சொல்வதென்ருல் தமது பித்தலாட்டங்களைப் பிழையில்லாமல் மீண்டும் மீண்டும் ஒலிபரப்புவதில் வல்லவர்களான தமிழரசார் இப்போதும் அவ்வாறே ஒலிபரப்புவர் என்பதில் சந்தேகமில்லை. இவர்களின் பித்தலாட்டமான வாதங்களுக்கு தமிழ் மக்கள் எந்தளவு மதிப்புக் கொடுத்துள்ளார்கள் என்பது தேர்தலில் தெரிந்துவிடும்.

தமிழர் மத்தியில் உள்ள பிற்போக்குசக்திகள் தமது வர்க்க நலன்களை மேலும் பாதுகாத்துக்கொள்ள தமிழ் மக்களை பகடைக்காய்களாக்கி தேர்தல் சூதாட்டத்தை நடத்த முன்வந்திருக்கும் இவ்வேளையில் பெருவாரியாயுள்ள சாதாரண தமிழ் மக்கள் உழைக்கும் வெகுஜனங்கள் இத்தேர்தல் சூதாட்டத்தாலோ, வெறும் பேச்சு மேடையாக உள்ள பாராளுமன்றத்தாலோ தமது பிரச்சினைகள் எதுவும் தீரப்போவதில்லை என்பதைத் தெட்டத்தெளிவாய் உணர்ந்துகொள்வதில் சிரமம் ஒன்றுமில்லை. கிட்டத்தட்ட கடந்த 25 வருடங்களாக தமக்குத் தலைமைதாங்கிய தமிழரசு, தமிழ் காங்கிரஸான முதலாளித்துவ கட்சிகள் பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்குத் தம்மைப் பகடைக்காய்களாகப் பாவித்தனரே தவிர, இந்தக் கால்நூற்றுண்டு காலத்தில் தமது பிரச்சினை ஒன்றையேனும் தீர்த்துவைக்கவில்லை என்பதும், கூப்பனரிசியைப் பாதியாகவெட்டியது, ரூபாயின்மதிப்பை மூன்று தடவை குறைத்தது, வாழ்க்கைச் செலவை உயர்த்தியது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கியது போன்ற மக்களை வெகுவாகப்பாதித்துள்ள யு. என். பி.யின் வெகுஜன விரோத நடவடிக்கைகளுக்கு இக்கட்சிகள் ஆதரவாகக் கை உயர்த்தியதும், யு.என். பி. ஆட்சியின் கீழ் வடபகுதியில் நடக்கும் பொலிஸ்—ராணுவ அட்டூழியங்களுக்குக்கூட இவர்கள் முடிவு தேடவில்லை என்பதும் தமிழ் மக்களுக்குத் தெரியாததல்ல. இந்த அனுவபரீதியான உண்மைகளே அவர்களின் சிந்தனையைத் திசை திருப்பவும் போதுமானவை.

எனவே, மூத்தவனுன தமிழ் காங்கிரஸிலோ, இளையவனுன தமிழரசிலோ, அல்லது யு.என். பி. யிலோ, முக்கூட்டுக் கட்சிகளிலோ, அல்லது இவர்கள் காட்டுகின்ற பாராளுமன்ற ஏமாற்று நாடகங்களிலோ இனியும் தமது கவனத்தைச் செலுத்தாது தமக்கு விடிவு தரும் புரட்சிகரப் பாதையில் கவனத்தைத் திருப்ப முன்வர வேண்டும்; முன்வருவர். இதற்கான அறிகுறிகள் காணப்படாமல் இல்லை.

★

## மக்களை மேலும் சீரழிக்க பத்திரிகைகள் நடத்தும் தேர்தல் சுவீப்

தேர்தலைப்பற்றிச் சொன்னதும் இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது. தன்னம்பிக்கையைக் கெடுத்து மூடத்தனத்துக்கு உரமூட்டும் திடீர் அதிர்ஷ்டங்களில் மக்களை மயங்கவைக்கும் பல சுவீப்புகளை அரசாங்கம் நடத்திவருகிறதல்லவா? முதலாளித்துவப் பத்திரிக்கைகளுக்கும் இப்படியான சுவீப் நடத்துவதில் கொள்ளை ஆசை ஆனுல், சுவீப் அரசாங்கத்தின் ஏகபோகமாகிவிட்டதால் அதில் கைவக்க முடியவில்லை. இப்பத்திரிக்கைகளால். என்ருலும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவை சுவீப்பிலும் ஒரு தட்டுதட்டி விடுகின்றன. இப்போது தேர்தல் வருவதால் அதனைவைத்து சுவீப் சூதாட்டத்தில் இறங்கியுள்ளன பத்திரிக்கைகள் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை ஆசனங்கள் கிடைக்கும்? எந்தக்கட்சி ஆட்சிக்கு வரும்? வெற்றி பெறும் அபேட்சகர்கள் யார்? என்ற சோதிடப்போட்டியைத் தொடங்கியுள்ளன. இப்போட்டியில் கலந்துகொள்ள வாசகர்களைத் தூண்டும் விதத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொண்ட பரிசுகளையும் பெரும் விளம்பரங்களுடன் அறிவித்துள்ளன. ஒரு எறியில் இரண்டு மாங்காய் என்று சொல்வதுண்டு. இப்பத்திரிகைகள் ஒரு எறியில் மூன்று மாங்காய்களை விழுத்தப்பார்க்கின்றன. இப்போட்டியால் ஒன்று தேர்தலில் முழுமூச்சாக ஈடுபடச் செய்வது; இரண்டு: பத்திரிகைகளின் விற்பனையைக் கூட்டுவது; மூன்று, மக்களின் மனோபாவத்தை அறிந்து, காற்று எந்தப்பக்கம் வீசுகிறது என்று தெரிந்துகொள்வது. யு.என்.பிக்கு மாறுக வீசினுல் அதனை முறியடிக்க பிரசாரத்தில் புது விதமான தந்திரங்களையும் கையாளலாம் அல்லவா?

இப்படிக் கேவலமான முறைகளையெல்லாம் கையாளும் இந்தமுதலாளித்துவப் பிற்போக்குப் பத்திரிகைகள் மக்களின் விரோதிகள். அவர்களைச் சீரழிக்கும் நச்சுக்கருவிகள். இந்தக் கேடுகெட்ட பத்திரிகைகளை மக்கள் தூக்கியெறியும் காலம் நிச்சயம் வராமல் போகாது.

★

## மாணவரை இழிவாக அடிமைப்படுத்த ஆபாசக் கலாச்சாரம்

சென்றமாதம் சட்டக் கல்லூரி, வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கிடையில் ''கிரிக்கட் போட்டி'' என்ற போர்வையில் நடந்த காம களியாட்டங்களை சுட்டிக்காட்டியிருந்தோம். அதேபோன்று, கடந்த இருவார முடிவிலும் கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களால் இரு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

முதலாவது நிகழ்ச்சிகளை மாணவர்களது கலந்துரையாடல் அங்கே சிறப்பான அம்சமாக ''அழகுராணி'' போட்டி இடம் பெற்றது. பின்னர் விஞ்ஞான மாணவர்களின் ''தமாஷா'' சென்றவாரம் நடைபெற்றது. இதில் ஆபாச நடனங்களான ''கபரி'' போன்றவை முக்கியத்துவம் பெற்றன. இவைகள் யாவும் பல்கலைக் கழக வளவுக்குள்ளேயே (K. G. மண்டபத்தில்) நடைபெற்றன.

கடந்த வாரம் சட்ட மாணவர்களின் நடனம் சிலிங்கேய மண்டபத்தில் மேற்கத்திய ஆபாச நடனங்களுடன் நடைபெற்றது. அடுத்தாக வைத்திய மாணவர்களின் (Block Nite) கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது. இதில் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறுவது ஆபாசமான ''கபரி'' நடனமாகும். பல்கலைக் கழக உயர் கல்வி மாணவர்களைப் பற்றி சதா வசைபாடும் கல்வி அமைச்சர் காலனித்துவ கல்விக் கொள்கயினுல் ஏற்படும் இவ் விளைவுகளைப்பற்றி சிந்திக்கத் தயாராயில்லை. ஆம், அவர் பிரதிநிதித்துவம் செய்யும் வர்க்க நலனுக்கு ஒப்ப உயர்கல்வி மாணவர்களின் சிந்தனையை முற்போக்கு வழியில் செல்லவிடாது தடுப்பதே கல்வி அமைச்சினதும், உயர் கல்வி பீட நிர்வாகிகளினதும் நோக்கமாகும். அதனுல்தான் கல்வி அமைச்சரும் இத்தகையக காமகளியாட்டங்களில் பங்குபற்றி குட்டையைக் குழப்புகிருர்.

இந்து பௌத்த கலாச்சாரத்தையும். ஒழுக்கத்தையும் பற்றிப் பேசும் முதலாளித்துவ புத்திஜீவிகளுக்கு மேற்கத்திய முதலாளித்துவ பாலுணர்வு கழிசடைப் போராட்டங்களும் நிர்வாண கலாச்சாரங்களும் மிக உயர்ந்த நாகரீகமாகத் தெரிகிறது. இத்தகைய காமக் களியாட்டங்கள் பலவித பெயர்களில் பல்கலைக் கழகங்களில் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் மாணவர்கள் மத்தியில் ஐக்கியமின்மையையும், பிளவையும், தோற்றுவிக்க முயற்சிசெய்யப்படுகிறது.

இன்றைய காலனித்துவ கல்விக் கொள்கையை எதிர்த்தும், உயர் கல்விப்பீட அதிகார வர்க்க நிர்வாக முறைகளை எதிர்த்தும், நவீன உயர்கல்வி போதனு வசதிகளுக்காகவும், தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காகவும் அரசியல் ரீதியில் தீர்வு காணப் போராடும் மாணவர்களை காட்டுமிராண்டிகளாக, வெறியர்களாக, ஒழுக்கங்கெட்டவர்களாக முதலாளித்துவப் பத்திரிகைளும், உயர் கல்விப் பீட நிர்வாகிகளும் அமைச்சர்களும் பிரச்சாரம் செய்கின்றனர்.

அதேவேளை, மாணவர்களின் எழுச்சியை அடக்கவும், அவர்களை திசைதிருப்பவும் வேண்டி ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ நாற்றமெடுக்கும் கலாச்சாரத்தை பரவலாக மாணவர்கள் மத்தியில் திணித்து அடிமைப்படுத்த முயலுவதை மறைக்கின்றனர்.

# மறைந்த தோழர் குலவீரசிங்கம்

# தொழிலாளர் வர்க்க லட்சியத்துக்கு தன்வாழ்வை அர்ப்பணித்தார்

**தோழர் குலவீரசிங்கம் தனது 42 வது வயதில் காலமானது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும்., இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துக்கும், பொதுவாக தொழிலாளி வர்க்கத்துக்கும் ஒரு பேரிழப்பாகும்.**

தோழர் குலவீரசிங்கம் தனது இளமைப் பிராயத்திலேயே-மலாயாவில் படித்துக் கொண்டிருந்தபோதே-அரசியலிலும் பெரிதும் ஆர்வம் காட்டினார். இரண்டாவது உலக யுத்தம் முடிவடையும் தறுவாயிலும், அதற்குப் பிறகும் வீறிட்டெழுந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் அவர் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

தோழர் குலவீரசிங்கம் மலாயாவில், கீழ்மத்திய தர குடும்பம் ஒன்றில் பிறந்தார். இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் இலங்கை திரும்பிய அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தார்.

## கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு

அவர் மலாயாவில் இருந்தபோது சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இயங்கிய பிரித்தானிய எதிர்ப்பு இந்திய தேசிய ராணுவத்தில் அங்கம் வகித்ததினால் அவரது நடவடிக்கையும், அவரது கண்ணோட்டமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையைக் கொண்டிருந்தன. எனவே, பிரித்தானிய காலனியான மலாயாவிலிருந்து மற்றொரு பிரித்தானிய காலனியான இலங்கைக்கு வந்த பிறகு தோழர் குலவீரசிங்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு மேலும் உறுதியடைந்தது. அவரது நடவடிக்கைகள் அதே நோக்கத்தைக் கொண்டிருந்தன. ஆதலால் அவர் தனது ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுக்கு சரியான உருவம் கொடுப்பதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன்-அதாவது அவர் இலங்கைக்கு வருதவற்கு ஒரு வருடத்துக்கு முன்பாகவே தமிழ்ப் பிரதேசங்களில் தனது ஸ்தாபனங்களைக் கட்டி எழுப்பிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புகொண்டார்.

தோழர் குலவீரசிங்கம் மார்க்சிஸம்-லெனினிஸத்தைக் கற்கத் தொடங்கிய பின்னர், அரசியல் பிரச்சினைகளையும், அரசியல் கட்சிகளையும் ஒரு புதிய தெளிவான கண்ணோட்டத்துடன் பார்க்கத் தொடங்கினார். சுபாஸ் சந்திரபோஸின் இயக்கம் பாசிஸத்துக்கு ஆதரவாயும் மக்கள் மீது நம்பிக்கை வைக்காமல் ஒரு தலைவன் மீது நம்பிக்கை வைத்தும், சித்தாந்தம் எதுவும் இல்லாமலும் இருந்ததினால், சுபாஷ் சந்திரபோஸின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மாறிச் செல்லும், ஒரு உள்நாட்டு நிகழ்வு என்பதை தோழர் குலவீரசிங்கம் உணர்ந்துகொண்டார். மார்க்சிஸம்-லெனினிஸ சித்தாந்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உள்ள தொழிலாளி வர்க்கம்தான் ஏகாதிபத்திய அடக்குமுறையிலிருந்தும், முதலாளித்துவச் சுரண்டலிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான வெகுஜனப் போராட்டங்களை வெற்றிக்கு அழைத்துச் செல்லும் என்பதை தோழர் குழவீரசிங்கம் வெகு விரைவில் அறிந்து கொண்டார்.

## முழுநேர ஊழியர்

தோழர் குலவீரசிங்கம் தனது இளமைக் காலத்தில் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்த போதிலும் தான்கொண்ட கொள்கையை நடைமுறைப் படுத்த அவர் தயங்கியதில்லை. அவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அது நடத்திய இயக்கங்கள், பிரச்சாரங்கள், போராட்டங்கள் ஆகியவற்றில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக கைது செய்யப்பட்டு. சட்ட நடவடிக்கைக்குள்ளான கம்யூனிஸ்ட் என்ற அளவுக்கு அவருடைய நடவடிக்கைகள் சென்றன.

பொலிஸாரின் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்காக தோழர் குலே திருக்கோணமலைக்குச் சென்றார். அங்கும், அவர் இயக்க வேலைகளில் ஈடுபட்டார். தொழிற் சங்கங்களைக் கட்டி எழுப்பும் பணியில் முழு மூச்சுடன் இறங்கினார். தொழிற் சங்கப் போராட்டத்தின் வரம்புகளை-அதன் மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகளை மார்க்சிஸம்-லெனினிஸத்தின் மூலம் உணர்ந்து கொண்ட தோழர் குலவீரசிங்கம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்



வட வியட்நாம் ஜனநாயகக் குடியரசுக்கு தோழர் கே. குலவீரசிங்கம் சென்றிருந்தபோது, ஜனதிபதி ஹோசிமின் அவர்களுடனும் மற்றும் தலைவர்களுடனும் (வலது புறத்தில் முதலாவதாக) காணப்படுகிறார்.

சியின் கிளை ஒன்றை அங்கு நிறுவி, அதன் செயலாளராகவும் இயங்கினார்.

1950 லிருந்து அவர் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் முழுநேர ஊழியராக இயங்க ஆரம்பித்தார். அவர் முதலில் தேயிலை, ரப்பர், தென்னை மற்றும் பொது உற்பத்தி தொழிலாளர் சங்கத்தில் பணியாற்றி பின்னர், இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள ஏனைய தொழிற்சங்க வேலைகளிலும் பங்கெடுத்தார். தொழிற்சங்க இயக்கத்தில் அவருக்கு இருந்த நீண்ட அனுபவம், எந்தவிதமான பிரச்சினைகளையும் கையாளக்கூடிய திறமை, தொழிற் சங்க இயக்கத்தின் உள்ளேயும், வெளியேயும் அவருக்கு இருந்த பரந்த தொடர்பு ஆகிய இத்தனையும் சேர்ந்து அவரை இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துக்கு மகத்தான பொக்கிஷமாகத் திகழச் செய்தன. பல தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர் அளித்த ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் நினைத்து பல தொழிலாளர்கள் இன்று நன்றியுடன் அவரை நினைவு கூருகிறார்கள், எல்லோருடனும் அவர் பழகும் விதம், அவரது எளியதன்மை, தலைமைக் காரியாலயத்துக்கு அதிகாலையிலேயே வந்து கடமையாற்றுவது ஆகியன தொழிலாளர்களை அவர்பால் வென்றெடுத்தன.


## கடைசியாக கலந்துகொண்ட நிகழ்ச்சி

1957ல் நடைபெற்ற இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் 14வது மாநாட்டில் அவர் இ. தொ. ச. சவின் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றுலிருந்து இறக்கும்வரை இப்பதவியை அவர் திறமையுடன் வகித்தார். பல சம்பள நிர்ணய சபைகளில் தோழர் குலே இ. தொ. ச. சவின் பிரதிநிதியாகக் கடமையாற்றினர். தேயிலை ஏற்றுமதித் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ 1-35 சதம் சம்பள உயர்வு அளிக்கவேண்டுமென்ற தீர்மானத்தை சம்பள நிர்ணய சபையில் கொண்டு வந்து அதனை அச்சபை ஏற்றுக்கொள்ளச் செய்தது தோழர் குலே சமீபகாலத்தில் ஈட்டிய வெற்றிகளில் குறிப்பிடத்தக்கதாகும், இத்தீர்மானத்தை உறுதிப்படுத்துவதற்காக சம்பள நிர்ணய சபை நடத்திய கூட்டத்தில் அவர் சமூகமளித்ததுதான் தோழர் குலே காலமாவதற்கு முன் கடைசியாகக் கலந்துகொண்ட தொழிற்சங்க நடவடிக்கையாகும். நியமன அங்கத்தவர்கள் வராமையால் அக்கூட்டம் நடைபெறவில்லை.

தோழர் குலே பல சர்வதேச மாநாடுகளில் இ. தொ. ச. ச. வின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். வியட்நாம், அல்பேனிய நட்புறவுச் சங்கங்களில் அவர் அதிக சிரத்தை எடுத்தார். இலங்கை - அல்பேனிய நட்புறவுச் சங்கத்துக்கும் அவர் தூணக விளங்கினர்.

மார்க்சிஸம் — லெனினிஸம் மாசேதுங் சிந்தனையைப் பின்பற்றும் சக்திகளுக்கும், நவீன திரிபுவாதிகளுக்கும் இடையில்

8 -ம் பக்கம் பார்க்க



இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் காரியாலய மண்டபத்தில் தோழர் குலவீரசிங்கத்தின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டிருந்த காட்சி

# ஆபிரிக்காவில் தேசிய விடுதலை இயக்கம் பேரெழுச்சியுடன் முன்னேறுகிறது

## அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு கடுமையான எதிர்ப்பு பரவுகிறது

கடந்த பத்தாண்டுகளில் காலனித்துவம், நவ காலனித்துவம் ஆகியவற்றிற்கு எதிராக கடுமையான போராட்டத்தில் எழுச்சியுற்ற ஆபிரிக்க மக்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் தேசிய விடுதலை இயக்கம் ஆபிரிக்கா முழுவதும் தீவிரமாகவும் ஆழமாகவும் முன்னேறியுள்ளது.

காட்டுமிராண்டித்தனமான மேற்கத்திய காலனித்துவத்தின் கீழ் நீண்ட நெடுங்காலமாக துன்புற்று வந்த ஆபிரிக்க மக்கள் 2வது உலக யுத்தத்துக்குப் பின்னர், பெருவிழிப்புடன் எழுச்சியுற்று வருகின்றனர். ஏகாதிபத்தியத்துக்கும் காலனிதுவத்துக்கும் எதிராக ஆபிரிக்க மக்கள் நடத்துகின்ற புரட்சிகர யுத்தமும், அவர்களின் தேசிய விடுதலைக்கான புரட்சிகரப் போராட்டங்களும் ஆபிரிக்கக் கண்டம் முழுவதும் படிப்படியாகப் பரவி 1960ம் ஆண்டு ஆரம்பத்தில் புதியதொரு கட்டத்தை அடைந்தது. கடந்த பத்தாண்டுகளில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆபிரிக்க மக்கள் கடுமையான போராட்டத்தை நடத்தி பிரிட்டிஷ், பிரெஞ்சு ''கலோனியல் சாம்ராஜ்யங்களை'' சின்னாபின்னப் படுத்தியுள்ளனர்.

காலனித்துவம், நவகாலனித்துவம் ஆகியவை ஆட்சி புரிகின்ற பகுதிகளில் ஆயுதப் போராட்டம் பரவி வருகிறது. ஆபிரிக்கா கண்டத்தில் மார்க்சிஸம்—லெனினிஸம் — மாசேதுங் சிந்தனை வேகமாகப் பற்றிப் படருகிறது. மாபெரும் தலைவர் மாசேதுங் குறிப்பிட்டுள்ள ''ஏகாதிபத்தியமும் சகல பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகள்'', ''அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கிறது.'' என்ற மகத்தான உண்மைகள் ஏகாதிபத்தியத்தையும், காலனித்துவத்தையும் எதிர்த்துப் போராடுகின்ற புரட்சிகர ஆபிரிக்க மக்களுக்கு உந்துதல் அளிக்கிறது.

### காலனித்துவத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டம்

அநேகமான புரட்சிகர ஆபிரிக்க மக்கள் தமது தேசிய விடுதலைக்காக ஆயுதம் தாங்கிப் போராடுகிறார்கள். 1960 ஆரம்பத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியமும், நவீன திரிபுவாதமும் அடக்கியொடுக்கப்பட்ட ஆபிரிக்க மக்களின் ஆயுதப் போராட்டத்தை தடை செய்வதற்கு பகீரதப் பிரயத்தனம் எடுத்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியம், இம் மக்கள் பலாத்காரப் போராட்டத்தில் ஈடுபடுவதை ''சுமுகமான சமாதான மாற்றம்'' என்ற பிரச்சாரத்தின் மூலம் தடுக்க முயன்றது. ஆனால், கோமாளிக் குருஷ்சோவோ ஆபிரிக்க மக்களின் ரட்சகனாக தன்னைக் காட்டிக் கொண்டு ''ஐ. நா. மூலம் காலனித்துவம் ஒழித்துக்கட்டப்படும் வரைகாத்திருக்குமாறு அவர்களுக்குக் கூறினான். ஆனால், அடக்கி ஒடுக்கப்பட்ட ஆபிரிக்க மக்கள் இவர்களின் நயவஞ்சகமான தந்திரங்களுக்கு இரையாக மறுத்துவிட்டனர்.

அல்ஜீரிய மக்கள் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதப் போராட்டம் நடத்தி, இறுதியில் 130 வருடங்களாக பிரெஞ்சு ஏகாதிபத்தியம் நடத்தி வந்த காலனித்துவ ஆட்சியை 1962ல் தூக்கியெறிந்தனர். கொங்கோவில் (கின்சாஷா) உள்ள தேசபக்த மக்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்தினது அடிவருடிகளின் பிற்போக்கு ஆட்சிக்கு அடிக்கு மேல் அடி கொடுத்தனர்.

''அமைதியான பிரதேசங்கள்'' என்று குறிப்பிடப்படுகின்ற போர்த்துக்கல் காலனிகளான அங்கோலா, மொசாம்பிக், கினி (பிசௌ) ஆகிய நாடுகளில் உள்ள மக்கள் ஐ. நா. வின் ''நன்மைகளை'' திட்டவட்டமாக நிராகரித்துவிட்டு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களின் இப் போராட்டம் கிராமப் புறங்களுக்கு ஆழமாகச் சென்று விட்டது. அவர்கள் தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அவர்களின் தேசபக்த ஆயுதப்படைகள் நாள்தோறும் வளர்ந்து வருகின்றன.

கினியில் (பிசௌ) உள்ள தேசபக்த ஆயுதப்படைகள் தமது நாட்டின் பெரும் பகுதியில் அதிகாரம் செலுத்துவதோடு அப் பிரதேசங்களில் நிர்வாகக் குழுக்களையும் அமைத்து வருகின்றனர். மொஸாம்பிக்கில் தேச பக்த ஆயுதப் படைகள் தமது அதிகாரத்தில் உள்ள பிரதேசங்களில் உற்பத்திக்கான இயக்கம் ஒன்றை ஆரம்பித்து, வெகுஜனங்களை அணிதிரட்டி நீண்டநாள் யுத்தக் கொள்கையை கையாண்டு வருகின்றனர். போர்த்துக்கல் காலனிகளிலுள்ள தேசபக்த ஆயுதப் படைகள் லட்சத்துக்கும் மேற்பட்ட போர்த்துக்கல் காலனித்துருப்புகளை தடுத்து நிறுத்தியுள்ளதோடு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையில் உள்ள நேட்டோ கூட்டணியின் ஆதரவு பெற்ற போர்த்துக்கல் காலனிவாதிகளை திக்குமுக்காடச் செய்துள்ளனர். 1960க்குப் பின்னர் தென்மேற்கு ஆபிரிக்காவிலும், ஷிம்பாவேவிலும் உள்ள கொரில்லாப் போராட்ட வீரர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து தென் ரொடீஷிய வெள்ளை ஆட்சியினருக்குக் கிலியை உண்டுபண்ணியுள்ளனர். ஆபிரிக்காவின் தென் பகுதியில் உள்ள இந்த இரு ராஜ்யங்களிலும் தேசபக்த மக்களின் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறுகின்றனர்.

### போராட்டத்தை தொடர்ந்து நடத்தி தேசிய இயக்கத்தை ஸ்திரப்படுத்துகின்றனர்

பழைய, புதிய காலனித்துவவாதிகளுக்கு எதிராக விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடத்துவதன் மூலமே தமது சுதந்திரத்தை ஸ்திரப்படுத்த முடியும் என சுதந்திரமடைந்துள்ள சில ஆபிரிக்க நாடுகளின் மக்கள் பூரணமாக நம்புகின்றனர். கடந்த பத்தாண்டுகளில் புதிய, பழைய காலனித்துவவாதிகளின் தலையீடுகள், கட்டுப்பாடு, சீர்குலைவு, குடைகவிழ்ப்பு, ஆக்கிரமிப்பு ஆகியவற்றிற்கு எதிராக கினி, தன்ஸானியா, கொங்கோ மக்கள் குடியரசு, ஷாம்பியா போன்ற நாடுகளின் மக்கள் கடுமையாகப் போராடி வெற்றிக்குமேல் வெற்றி ஈட்டியுள்ளார்கள். 1966 - 69 வரை ஏகாதிபத்தியவாதிகள் சிருஷ்டித்த எதிர்ப் புரட்சி ராணுவ சதிகளையும் சீர்குலைவு சதிகளையும் தகர்த்து விட்டனர். சுதந்திரம் அடைந்த பின்னர், 1969 ஒகஸ்டில் தான்ஸானியாவில், உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளின் துணையோடு ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கிய எதிர்ப்புரட்சிச் சதியை தான்ஸானியா நிர்மூலமாக்கியது. கொங்கோ குடியரசில் உள்ள மக்கள், ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலியான ஜுலோவை 1963 ஒகஸ்டில் தூக்கியெறிந்து விட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அதன் அடிவருடிகளுக்கும் எதிராகப்போராடி வருவதோடு, ஒன்றன் பின் ஒன்றாக இவர்கள் சிருஷ்டித்த சதிகளையும் தகர்த்து வருகின்றார்கள்.

ஏகாதிபத்தியத்துக்குச் சேவகஞ் செய்த ஐத்திரிஸ் நிலப்பிரபுத்துவ ஆட்சியை லிபிய மக்கள் 1969 செப்டம்பரில் தூக்கியெறிந்த பின்னர் அந் நாட்டில் பலகாலமாக இருந்து வந்த அமெரிக்க, பிரித்தானிய ஆக்கிரமிப்புத் துருப்புகளை அந் நாட்டிலிருந்து வெளியேறச் செய்துள்ளனர். சோமாலியாவில் எட்டு வருடங்களாகப் பல தில்லு முல்லு வேலைகளில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ''சமாதானப் படை'' யினர் 1969 இறுதியில் சோமாலி மக்களின் வெறுப்புக்கு ஆளாகி மூட்டை முடிச்சுடன் வெளியேற்றப்பட்டனர். ஸாம்பியாவில் இவ்வளவு காலமும் அமெரிக்க, பிரித்தானிய மற்றும் வெளிநாட்டு மூலதனங்கள் வைத்திருந்த பித்தளையை எடுக்கும் நிரந்தர உரிமையை ஸாம்பியா அரசாங்கம் ரத்துச் செய்துவிட்டது. இவையெல்லாம் பழைய, புதிய காலனித்துவத்திற்கு எதிராக நிகழ்ந்தவையாகும். இவை அந் நாடுகளின் தேசிய விடுதலையை ஸ்திரப்படுத்தியுள்ளன.

### அமெரிக்க ஏகாதிபத்தியமும் நவீன திரிபுவாதமும் அம்பலமாயின

இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு ஆபிரிக்காவில் கிளர்ந்தெழுந்த தேசிய விடுதலை இயக்கங்களுக்கு பிரித்தானிய, பிரெஞ்சு, பெல்ஜிய ஏனைய பழைய காலனித்துவவாதிகளால் முகம் கொடுக்க முடியவில்லை. இவ் வியக்கங்களை பலாத்காரமாக நசுக்குவதற்கும் இவர்கள் முழுமூச்சாய் செயல்பட்டபோதிலும் முடிவில் தோல்வி கண்டனர். ஆதலால் இந்தக் காலனி நாடுகளுக்கு ''சுதந்திரம்'' அளிக்கும் வஞ்சகம் நிறைந்த தந்திர நாடகத்தை நடத்தினர். ''முன்னேறுவதற்காக பின் வாங்குவதாய் நடிக்கும்'' இந்த ஏதிர்ப்புரட்சிகர தந்திரோபாயத்தின் மூலம் தமது கலோனியல் நலன்களைப் பாதுகாக்க முடியும் என இவர்கள் வெறும் கனவு கண்டனர். பிரித்தானிய, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களின் மங்கு திசையை அமெரிக்க ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமாகப்பாவித்து இந்த இரு ஏகாதிபத்தியங்களும் வெளியேறியதினால் ஏற்பட்ட ''பெரும் இடைவெளியை'' ''நிறப்புவதற்கு'' தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்தது. முழு ஆபிரிக்க கண்டத்தையும் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்தோடு, தனது நவ காலனித்துவக் கொள்கைகளுக்கு சுதந்திரம் அடைந்த புதிய நாடுகளை இரையாக்க முயற்சித்தது. ஆபிரிக்காவில் தனக்கு ''ஒரு காலனியும் இல்லை'' என்று கூறிக்கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆபிரிக்க மக்களை ''வசப்படுத்த'' முயன்றது. கொங்கோவை (கே) திருகிக் கொள்வதற்கு 1960ல் அமெரிக்க ஏகாதிபத்தியமும், பெல்ஜிய ஏகாதிபத்தியமும் பெருமளவில் நடத்திய ஆயுதந்தாங்கிய ஆக்கிரமிப்பின் மூலமும், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏனைய ஆபிரிக்க நாடுகளில் நடத்திய சீர்குலைவு வேலைகள், குடைகவிழ்ப்புகள், ஆக்கிரமிப்புகள், தலையீடுகள் ஆகியவற்றின் மூலமும் அதன் நச்சுத்தனமான உண்மைச் சொரூபத்தை ஆபிரிக்க மக்கள் கண்டு கொண்டனர். ஆபிரிக்க மக்களின் ஆத்திரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகள் கிளறிவிட்டன.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஐ. நா. கொடியின் கீழ் கொங்கோவுக்கு எதிராக நடத்திய ஆயுதந்தாங்கிய ஆக்கிரமிப்பில் நவீன திரிபுவாதம் பெரும் பாத்திரத்தை வகித்தது. இதன் மூலம் அது ஏகாதிபத்தியத்தின் மதிப்பையும் பெற்றது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்போது வெளிநாடுகளில் ஆக்கிரமிப்பையும் விஸ்தரிப்பையும் நடத்துவதோடு, தனது நவ காலனித்துவக் கொள்கையை ஆபிரிக்காவில் தீவிரமாகக் கையாள்கிறது. நைஜீரியாவில் உள்ள வளங்களைக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன், பல ''இராணுவ நிபுணர்''களை அந் நாட்டுக்கு அளித்துள்ளது. ஆபிரிக்க மக்களை எதிர்த்து ஆபிரிக்க மக்களைப் போராட வைப்பதே இதன் நோக்கமாகும். சமூக ஏகாதிபத்தியத்தின் குற்றச் செயல்களும் ஆபிரிக்க மக்களின் ஆத்திரத்தைக் கிளறியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போன்று சமூக ஏகாதிபத்தியமும் தமது எதிரி என அநேகமான ஆபிரிக்க மக்கள் கருதுகின்றனர்.

''நீக்ரோ மக்களை அடிமைப் படுத்தி, அவர்களைப் பண்டமாற்று வியாபாரம் செய்ததன் மூலம் கொடிய ஏகாதிபத்திய காலனித்துவ முறைகள் உருவாகி பலமடைந்தன. ஆபிரிக்க மக்களை பூரணமாக விடுதலை செய்வதன் மூலம் அவைகளுக்கு நிச்சயமாக முற்றுப் புள்ளி வைக்கப்படும்'' என தலைவர் மாஓ கூறியுள்ளார். புதிய பத்தாண்டுகளில் ஆபிரிக்க மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி ஏகாதிபத்தியம், புதிய காலனித்துவம் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைபர்.

— பீக்கிங் ரிவ்யூ

## உலக வலம்

உஸ்மான்

### கம்போடியாவில் அமெரிக்கச் சதிக்கு

# மேலும் சில சான்றுகள்

கடந்த வாரம் இப்பத்தியிலே கம்போடிய நிகழ்ச்சிகள் குறித்து எழுதியபோது, அங்கு நடந்தேறிய இராணுவ எதிர்ப்புரட்சி எவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினால் திட்டமிடப்பட்டது என்பதைக் கூறியிருந்தேன். தொடக்கத்தில் ''எமக்கொன்றும் தெரியாது; அது உள்நாட்டு விவகாரம்'' என்று நடிக்க முயன்ற ஏகாதிபத்தியவாதிகள் பின்னர் தற்பெருமையுடன் தமது சாதனையைத் தெரிவித்திருக்கின்றனர்.

ஏகாதிபத்தியம் இன்று கதிகலங்கிச் செய்வதறியாது மூர்க்கத்தனமாக நாலா பக்கத்திலும் பலாத்கார முயற்சிகளை மேற்கொள்ளுகிறது என்று தோழர் மாஓ ஒரு சந்தர்ப்பத்திலே கூறியதற்கு ஒப்பவே கம்போடிய இராணுவ எதிர்ப்புரட்சி அமைந்துள்ளது. சமீபத்தில் அமெரிக்க பத்திரிகைகளிலே வெளிவரும் செய்திகளையும், கட்டுரைகளையும் பார்க்கும் போது, கம்போடியாவில் ஏகாதிபத்தியம் எதிர்ப்புரட்சியை அவசரம் அவசரமாக நடத்தியதற்குக் காரணம் தெரிகிறது. அதே சமயத்தில் அமெரிக்கா இச் சதியை முழுக்க முழுக்க நடத்தியது என்பதற்கு மேலும் சிற்சில சான்றுகள் தெரியவந்துள்ளன.

உதாரணமாக, இராணுவப் புரட்சி நடக்கச் சில தினங்களுக்கு முன்னர், டைம் என்ற ஏகாதிபத்திய வார சஞ்சிகை அனுபவமும் ''ஆற்றலும்'' நிரம்பிய ஒரு ''நிருபரை'' கம்போடிய தலைநகருக்கு அனுப்பி வைத்ததாம். அதே வேளையில் தென் வியட்நாமிலும் தாய்லாந்திலுமுள்ள நிருபர்கள் முக்கியமான செய்திகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனராம். மற்றைய அமெரிக்க சஞ்சிகைகளிலும் பார்க்க டைம், அமெரிக்க இராணுவத்துடனும், சி. ஐ. ஏ. யுடனும் நெருங்கிய தொடர்புகள் கொண்டது. ஆகவே, அவை நடத்தி முடித்த எதிர்ப்புரட்சி பற்றி அந்தச் சஞ்சிகைக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.

இரு காரணங்களுக்காக இந்த எதிர்ப் புரட்சியை நடத்தியிருப்பதாக அமெரிக்கப் பத்திரிகைகள் விளக்கம் கூறுகின்றன; முதலாவது: தென் வியட்நாமில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமைத் தளபதியின் கருத்துப்படி கம்போடியா மூலமாகவே வியட்நாமிய விடுதலைப் படைகளுக்கு யுத்த தளவாடங்களும், உணவுப் பொருட்களும் கணிசமான அளவு கிடைக்கின்றன. ஆகவே, அவற்றை நிறுத்தினால் தென் வியட்நாமில் விடுதலைப் படையினர் அழிவுற்றுப் போகுமளவுக்குப் பலவீனமடைவர். இதற்காகவே, ஏகாதிபத்தியவாதிகள் காலால் இடும் கட்டளைகளைத் தலையால் செய்யத்தக்க பிற்போக்குவாதிகளைப் பதவியில் ஏற்றி வைத்திருக்கின்றனர்.

இது ஏகாதிபத்தியவாதிகளினது (சமூக ஏகாதிபத்தியவாதிகளினதும்) இராணுவ மனப்பான்மையையே காட்டுகிறது. இத்தனை வருடங்களுக்குப் பின்னரும் மக்கள் யுத்தத்தின் இயல்பை அறியாத வரட்டுப் பேச்சு இதுவாகும். தென் வியட்நாமிய மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் படைகள் நீரில் மீன்கள் போல இருக்கும். கம்போடியாவின் எல்லைப் பிரதேசங்களில் தொந்தரவு கொடுப்பதால் வீரமிகு விடுதலைப் போர் தளரப் போவதில்லை.

இரண்டாவது: அயல் நாடான லாவோஸில் பதற் லாவோ தேசபக்தப் படைகள் சகல விதமான அமெரிக்கத் தலையீடுகளையும் தாக்குதல்களையும் முறியடித்துக்

## ஏகாதிபத்தியம் எதிர்ப்புரட்சி நடத்தியதற்கு காரணம்

கொண்டு பல இடங்களில் முன்னேறியுள்ளன. லாவோஸ் வலதுசாரிப் படைகள் தொடர்ந்து பின்வாங்குவதைக் கண்ட அமெரிக்க, ''போர் அனுபவமிக்க'' தாய்லாந்துப் படைப் பிரிவுகள் சிலவற்றை லாவோஸில் நிறுத்தியுள்ளது. எனினும், தேச பக்தப் படைகள் நினைத்தால் முழு லாவோஸையும் கைப்பற்றக் கூடிய நிலைமை தோன்றியிருப்பதாக ஏகாதிபத்தியவாதிகள் கவலையுடன் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. பல கோடி டாலர்களை இறைத்தும் பயனில்லாமல் இருக்கிறது. அரசாங்கப் படைகள் சம்பளத்துக்கு வேலை செய்பவர்கள். ஆகவே, சாவுக்கு அஞ்சுபவர்கள். வேவு பார்ப்பதற்காக முன்னணியிலிருந்து வெகு தூரம் முன்னேறும் தேசபக்தப் படையினரைக் கண்டதுமே பெருந் தாக்குதல் நடைபெறப் போவதாகப் பயந்து பின்வாங்குகின்றனவாம் அரசாங்கப் படைகள். இந் நிலையில் ''லாவோஸ் கை நழுவிவிட்டது என்று கருத வேண்டும்'' என்று டைம் சஞ்சிகை கசப்புடன் மென்று விழுங்கியுள்ளது.

ஆகவேதான், ஒரு நாட்டை ''இழந்ததும்,'' அந்த இழப்புக்கு ஈடு செய்யுமுகமாக இன்னொரு நாட்டை ''பெற்றுக் கொண்டதாக'' ஏகாதிபத்தியம் தன்னைத்தானே திருப்திப்படுத்திக்கொள்கிறது. தோல்வியை ஏற்காத ஏகாதிபத்திய ஆணவத்தை இது துலக்கிக் காட்டுகிறது. இதனையே தலைவர் மாஓ தத்ரூபமாகக் குறிப்பிட்டார்.

''தொல்லை கொடுப்பது, தோல்வி அடைவது. மீண்டும் தொல்லை, மீண்டும் தோல்வி........ தமது அழிவு வரை; இது ஏகாதிபத்தியவாதிகளும், உலகப் பிற்போக்குவாதிகளும் மேற்கொள்ளும் தர்க்கம். அவர்கள் ஒருபோதும் இந்தத் தர்க்கத்துக்கு விரோதமாகச் செல்லமாட்டார்கள்...... போராட்டம், தோல்வி, மீண்டும் போராட்டம், மீண்டும் தோல்வி, மீண்டும் போராட்டம்...... தமது வெற்றிவரை. இதுதான் மக்களின் தர்க்கம். அவர்களும் இந்தத் தர்க்கத்துக்கு எதி'' ராகச் செல்லமாட்டார்கள்.

தலைவர் மாஓவின் சர்வவியாபகமான சிந்தனைக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது கம்போடிய விவகாரம். ஒரு வார காலத்துக்குள்ளேயே கம்போடிய பிற்போக்குவாதிகளுக்கு எதிராக மக்கள் சில பகுதிகளில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். நாளடைவில் இதுவும் வேகமும், விசாலமும் பெற்று இந்தோசீன தீபகற்பம் முழுவதிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் கொரில்லாப் போராக மூண்டு நிரந்தரமான வெற்றியை அடையும் என்பதில் சந்தேகமில்லை.

★

## இஸ்ரேலுக்கு இந்தோனேஷிய அதிகாரிகள் ராணுவ சப்ளை

சில நாட்களுக்கு முன் இந்தோனேஷியத் தலைநகர் ஜகர்த்தாவிலிருந்து வெளிவந்த உத்தியோகப் பூர்வமான செய்தியொன்றின்படி இஸ்ரேலியருக்கும், நைஜீரியருக்கும் யுத்த தளவாடங்கள் கள்ளமாக விற்றதாக சில இந்தோனேஷிய இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்களாம்.

றபாத் ''அரபு உச்சி மாநாடு'' நடந்த காலத்தில் இஸ்லாமிய நாடு என்ற பேரில் அரபு மக்களுக்கு ஆதரவு நல்குவதாக இந்தோனேஷிய வெளிநாட்டு அமைச்சன் ஆதம் மாலிக் குரல் எழுப்பினான். அதே வேளையில் அமெரிக்காவிடமிருந்து வேண்டிய பெருவாரியான யுத்த தளவாடங்களில் ஒரு பகுதியை இந்தோனேஷிய இராணுவ அதிகாரிகள் சிலர் கமிஷன் பெற்றுக்கொண்டு இரகசியமாக அரபு மக்களின் பிரதான—நேரடியான—எதிரிக்கு அதாவது, இஸ்ரேலுக்கு விற்றுள்ளனர். உதட்டில் இஸ்லாமியப் பேச்சும், உள்ளத்தில் லாப நோக்கும் இருப்பதை இது தெளிவாக்குகிறதல்லவா?

இந்தோனேஷிய மக்கள் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காக, அரபு மக்களுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறிக்கொண்டு, நடைமுறையில் அரபு மக்களைக் கொன்று குவிக்க இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுகிறது.

இதிலொன்றும் ஆச்சரியம் இல்லை! ஒரு காலத்தில் எகிப்து மன்னனாயிருந்த பாரூக் ஆங்கிலேயரிடமிருந்து வாங்கிய துப்பாக்கிகளையும், தோட்டாக்களையும் கொள்ளை லாபத்துக்கு கள்ள மார்க்கட்டில் இஸ்ரேலியருக்கு விற்றுவிட்டு, பழுதடைந்த, இரண்டாந்தர ஆயுதங்களையே தனது சொந்த எகிப்தியப் படைகளுக்கு வழங்கினான். போரிலே பல நூற்றுக்கணக்கான அரபு இராணுவ வீரர் வீணே மாண்டனர். இத்தகைய அநியாயச் செயல்களைக் கண்டு மனம் புழுங்கியே தேசப்பற்றுக்கொண்ட இளம் தலைமுறையைச் சேர்ந்த இராணுவ தளபதிகள் புரட்சி நடத்தினர் என்று ஜெனரல் நகீப் தனது சுய சரிதையில் எழுதுகிறார்.

ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவை ஆக்கிரமித்த காலத்தில், அவர்களோடு சேர்ந்துகொண்டு சீன மக்களான தேச பத்தர்களையும், கம்யூனிஸ்டுகளையும் எதிர்த்துப் போரிட்டான் பிற்போக்குவாதி சியாங் கை-ஷேக். அதாவது, வாய்ப் பேச்சுக்குச் சொல்லிக்கொள்ளும் சீனச் சகோதரரை விட பாசிஸ்டுகளான ஜப்பானியர் அந்தத் தேசத் துரோகிக்கு உகந்தவராயிருந்தனர்.

இந்தோனேஷிய இராணுவ அதிகாரிகள் அரபு மக்களிலும் பார்க்க இஸ்ரேலியரை விரும்புவதும், அன்று சியாங் கை-ஷேக் கும்பல், சீனச் சகோதரரிலும் பார்க்க அந்நிய ஜப்பானியரை நேசித்ததும் எதனால்? வர்க்க பாசத்தினாலாகும். மார்க்ஸ் இரத்தினச் சுருக்கமாகக் கூறியது போல பங்கு மார்க்கட்டில் இன, மொழி, மதபேதம் கிடையாது; வர்க்க உடன்பாடுதானுண்டு. ஆகவேதான், இந்தோனேஷிய பாசிஸ்டுகளுக்கும், இஸ்ரேலிய சியோனிஸ்டுகளுக்கும், ஜப்பானிய பிற்போக்குவாதிகளுக்கும், சீனத் துரோகிகளுக்கும் பொது எஜமானனாயும், நண்பனாயும் ஏகாதிபத்திய வெள்ளை அமெரிக்கா விளங்க முடிகிறது.

ஆகவேதான், உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உலக மக்கள் போராட வேண்டுமென்றார் தலைவர் மாஓ.

''உலக மக்களே, ஒன்றுபட்டு அமெரிக்க ஆக்கிரமிப்பாளரையும், அவர்களின் அடிவருடிகளையும் தோற்கடியுங்கள். உலக மக்களே, தைரியமாய் இருந்து, துணிந்து போராடி கஷ்டங்களைத் துச்சமாக மதித்து, அலையலையாக முன்னேறுங்கள்' அப்பொழுது உலகம் முழுவதும் மக்களுக்கே உரித்தாகும். எல்லாவிதமான பிசாசுகளும் நிச்சயம் ஒழிக்கப்படும்.''

தலைவர் மாஓ கூறுவதுபோல உலக வரலாற்றின் தர்க்கம் இவ்வாறு இருக்கவும், அழிவின் விளிம்பிலுள்ள பிற்போக்கு சக்திகள் உலகைத் தமதாக்கிக்கொள்ள மூடத்தனமா முயல்கின்றன.

அமரிக்க ஏகாதிபத்தியமும், ரஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் உலகை இரு கூறாக்க முனைவதற்கு ஏற்ப, இந்தோனேஷியாவுக்கு ஏகமனதுடன் இராணுவத் தளவாடங்களும், ஆயுதங்களும் விற்று வருகின்றன. அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய ஆயுதங்களில் ஒரு பகுதியை இஸ்ரேலுக்கு விற்றது போபலவே ரஷ்யரிடமிந்து பெற்ற ஆயுதங்களில் ஒரு பகுதியை நைஜீரியருக்கு விற்றுள்ளனர் இந்தோனேஷிய இராணுவத்தினர். ஆக இராணுவத் தளவாட விற்பனையில் இரு ஏகாதிபத்தியங்களும் சரிநிகர் சமானமாக உள்ளன.

அண்மையில், அமெரிக்கரும், ரஷ்யரும் திட்டமிட்டே இந்தோனேஷியா மூலமாக முறையே இஸ்ரேலியருக்கும், நைஜீரியருக்கும் இவ்வாறு ஆயுதங்களை மறைமுகமாக விற்க ஏற்பாடு செய்தனர் என்று ஒரு பிரெஞ்சுப் பத்திரிகையாளர் கருத்துத் தெரிவித்துள்ளார். அதன் உண்மை பொய் எவ்வாறாக இருப்பினும் அது நடக்கக் கூடியதே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இத்தகைய கபட நாடகங்கள் நீண்ட நாள் நிலைக்கமாட்டா,



பாலஸ்தீன் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத், மக்கள் சீனக் குடியரசின் பிரதமர் தோழர் சௌ என்-லாயுடன் உரையாடிக் கொண்டிருக்கும் காட்சி.

# மக்கள் சீனுவின் பேராதரவு பாலஸ்தீன் புரட்சியின் தூணுகத் திகழ்கிறது

**மக்கள் சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கடந்த மார்ச் மாதம் சீனத்துக்கு விஜயம் செய்த அல்பத்தாஹ் (பாலஸ்தீன் தேசிய விடுதலை இயக்கம்) பிரதிநிதிகள் குழுவுக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. அக்குழுவினருக்கு மார்ச் 21ந் தேதி மக்கள் சீனத்தின் உதவிப் பிரதமர் லிஸியெண் - நியென் பீகிங்கில் விருந்துபசாரம் அளித்தார். அப்போது அல்பதாஹ்வின் தலைவர் யஸீர் அரபாத் ஆற்றிய உரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.**

-- யஸீர் அரபாத்

''சியோனிஸம், (யூதவாதம்) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றிற்கு எதிராக கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாலஸ்தீன் மக்களின் சார்பில், அரபு மக்களதும், பாலஸ்தீன் மக்களதும் நண்பர்களான மாபெரும் தலைவர் மாசேதுங் அவர்களுக்கும், அவரது வீர மிக்க தோழர்களுக்கும், சீன மக்களுக்கும் நான் மரியாதையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

''பாலஸ்தீன் மக்களுக்கும், சீன மக்களுக்கும் இடையே நிலவும் போராட்ட உறுதி படைத்த நட்புறவை எமது புரட்சிவாதிகளும், மக்களும் மிக உயர்வாக மதிக்கின்றனர். எமது புரட்சிவாதிகளும் மக்களும் தலைவர் மாசேதுங் அவர்களையும் மகத்தான சீன மக்களையும் பெரிதும் நேசிக்கின்றனர்; மதிக்கின்றனர். அத்துடன் தலைவர் மாசேதுங்கினதும், சீன மக்களினதும் மகத்தான உன்னதமான கொள்கைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர். அவர்களின் இக் கொள்கை எமது புரட்சியை ஆதரிப்பதோடு, பலப்படுத்தியும் உள்ளது. அத்துடன் அதனை வெற்றிகரமாக முன்தள்ளியும் விட்டிருக்கிறது.

''எமது புரட்சி 1965ல் ஒரு சிலரைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து பாலஸ்தீன் அகதிகள் புரட்சிகர போராட்ட உறுதி கொண்ட மக்களாகத் திகழுகின்றனர். ''ஒரு சிறு பொறி பெரும் காட்டுத் தீயை உண்டாக்கி விடும்'' என்று தலைவர் மாசேதுங் கூறுவதைப் போலவேசியோனிஸத்துக்கும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகளுக்கும் எதிரான எமது புரட்சித் தீ, பரந்து விரிந்த அரபு பூமியிலே கொழுந்து விட்டெரிகிறது. எமது புரட்சி நாள் தோறும் வளர்ந்து வருகிறது.

''விடுதலை பெறுவதற்கும் இழந்த தமது தாயகத்தை மீண்டும் பெறுவதற்குமுள்ள ஒரேயொரு மார்க்கம் ஆயுதந் தாங்கிய வெகுஜனப் போராட்டத்தைத் தொடுப்பதேயாகும். என எமது புரட்சிவாதிகளும் மக்களும் நம்புகின்றனர். ''அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாயிலிருந்தே பிறக்கிறது'' என்று தலைவர் மாசேதுங் கூறியுள்ளதைப் போலவே, துப்பாக்கிகள் மூலம் மட்டுமே வெற்றி பெற முடியும்.''

''எமது புரட்சியைக் கருவறுக்கும். அதன் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் எமது முதுகுக்குப் பின்னுலிருந்து ரகசியமாகச் செய்யப்படுகின்ற ஒரு பயங்கர சதிக்கு எமது மக்கள் இன்று முகம் கொடுத்துள்ளனர். இச் சதி சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் செய்யப்படுகின்றது; அரபு மக்களுக்கு வெளியிலிருந்தும், உள்ளேயிருந்தும் செய்யப்படுகிறது. இச் சதியை தகர்த்து நொறுக்கவும் புரட்சியை மேலும் முன்னெடுத்துச் செல்லவும் நாங்கள் பெரும் முயற்சி செய்கின்றோம். எமது மக்கள் உறுதியும், வலிமையும் படைத்தவர்கள். அவர்கள் சகல சதிகளையும், சதிகாரர்களையும் நிச்சயம் முறியடிப்பர். புரட்சி வெற்றியீட்டும்வரைநாங்கள் தொடர்ந்து வளர்ந்து வருவோம்.

''சியோனிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டு, சூறையாடப்பட்டுள்ள பாலஸ்தீனத்தின் புரட்சிகர இலட்சியத்துக்கு சீன மக்கள் அளித்து வரும்பேராதரவு பாலஸ்தீன் புரட்சியின் தூணுகத் திகழ்கிறது. பாலஸ்தீனப் புரட்சியின் ஆரம்பகர்த்தாவான அல்பத்தாஹ் முதன் முதலாக சீனத் தலைநகரான பீக்கிங்கிலிருந்துதான் தனக்கு உதவியைப் பெற்றுக் கொண்டது என்பது நீங்கள் அறியாத விஷயமல்ல.''

## விசுவமடு விவசாயப் படை ஊழியர்கள் விடுதலை

அண்மையில் விசுவமடு விவசாயப்படை முகாமில் தீவிபத்துச் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட ஊழியர்கள் 10 பேரும் சென்றமாதம் 17ந் திகதி சாவகச்சேரி கோட்டில் குற்றங்கள் நிரூபிக்க முடியாத காரணத்தால் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு வழக்கு நீதிபதியினுல் தள்ளுபடி செய்யப்பட்டது. இச் சம்பவம் விசுவமடு விவசாயப்படை ஊழியர்களுக்கு பெரு வெற்றியாகவும், அதிகாரிகளின் முகத்தில் கரி பூசப்பட்ட சம்பவமாகவும் அமைந்துள்ளது. ஊழியர்களின் விடாப்பிடியான போராட்டமும், உறுதியும், ஐக்கியமுமே இவ்வெற்றிக்கு வித்திட்டன. இச்சம்பவங்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட பத்துப்பேர்மீதும் பழிவாங்கும் எண்ணத்துடன், அதிகாரிகள் தயாரித்ததாகக் கருதப்படும் பொய்ச் சாட்சியங்கள் கடைசி நேரத்தில் தோல்வியடைந்ததாத் தெரிகின்றது. இச் சம்பவங்கள் அதிகாரிகள்தான் இச்செயலைத் திட்டமிட்டுச் செய்துள்ளார்கள் என்ற ஊழியர்களினதும், பொதுமக்களினதும் கருத்துக்குத் தகுந்த உறுதியைக் கொடுத்துள்ளது.

தங்கள் மீது சுமத்தப்பட்ட நிருபிக்க முடியாமல், தாம் சுற்றவாளிகள் என நிருபிக்கப்பட்ட ஊழியர்கள் பத்துப் பேரும் கையெழுத்திட்டு விவசாயப்படை கமிஷனருக்கு அனுப்பிய கடிதமொன்றில், தம்மீது சுமத்தப்பட்ட அநியாயமான குற்றங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர். ''பல ஊழல்களுக்குப் பொறுப்பாயிருந்த சீமேந்துக் குதம் தீப்பற்றி எரிந்த சம்பவம் ஏற்கனவே பல கையாடல்களை நடத்திவிட்டு கணக்குக் காட்டமுடியாது திண்டாடிய அதிகாரிகளால் திட்டமிட்டு நடாத்தப் பட்டதாக நாம் பலமாகச் சந்தேகிக்கின்றோம்.

முத்தையன் கட்டு, விவசாயப்படை முகாமில் ஊழல்களை சுட்டிக்காட்டுவதில் முன்னணியில் நின்ற சிவலோக நாதனுக்கு ஏற்பட்ட கதி எங்களுக்கு இன்னொரு விதத்தில், நாம் பொய்க் குற்றச் சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்டது மல்லாமல் வேலையையும் இல்லாமலாக்கும் முறையில் ஏற்பட்டிருக்கின்றது...'' ஊழியர்களின் இக் கடிதம் விவசாயப் படையில் நடைபெறும் பயங்கர அடக்குமுறையையும் சர்வாதிகார நடைமுறைகளையும் புரிய வைக்கப் போதுமானதாகும்.

இந்த நிலைமையில் தங்களுக்கு எதிராக ஊழியர்களின் வெறுப்பு வளர்வதைக் கண்ட அதிகாரிகள், சிறு தகராறு ஒன்றைப் பாவித்து விவசாயப் படை ஊழியர்கள் தருமபுர மக்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டு கலவரங்களை உண்டாக்கும் முயற்சி ஒன்றில் இறங்கியதாகத் தெரிகின்றது. ஆனுல் இந்த சூழ்ச்சி பலனளிக்காது போகவே நேரடியாகவே சில அதிகாரிகளும், அவர்களது விரல்விட்டெண்ணக் கூடிய வால்பிடிகளும் தருமபுர உழைப்பாளி மக்களுக்கு எதிராக நேரடி நடவடிக்கையில் இறங்கினர். ஆனுல் தருமபுர மக்களினதும், விவசாயப் படை ஊழியர்களினதும் மிகவும் வெறுப்புக்குரிய அதிகாரிகளுடன் 'அடிக்கு அடி' என்ற ரீதியில் எதிர்த்துப் போராடியதன் மூலம் அதிகாரிகளுக்கும் அவர்களது வால்பிடிகளுக்கும் நல்ல பாடம்புகட்டியுள்ளனர் தருமபுர மக்கள். பல விதமான மோசடிகள், குழப்பங்கள் ஆகியவற்றிற்கெல்லாம் காரணகர்த்தா எனக் கருதப்படும் விவசாயப்படை முகாம் பொறுப்பதிகாரி உட்பட இரண்டு தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் சில வால்பிடிகள் தருமபுர மக்களால் நையப்புடைக்கப்பட்டுள்ளனர் என தெரிகிறது. இச் சம்பவம் அதிகாரிகளின் அடக்குமுறைகளில் வெறுப்புக் கொண்டுள்ள ஊழியர்களினதும் ஆதரவையும், பாராட்டுதலையும் பெற்றுள்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவங்கள் மக்களினது போராட்ட உணர்வையும், உறுதிப்பாட்டையும், ஐக்கியத்தையும், வெளிக்கொணர்ந்துள்ளதுடன், எதிர்காலத்தில் இப்பகுதியில் நடைபெறும் போராட்டங்களுக்கு பாதையையும் திறந்து வைத்துள்ளனர்.

## தருமபுர உழைப்பாளி மக்களின் கூலிவுயர்வு போராட்டம்

இந் நாட்டிலே மிகக் குறைந்த சம்பளத்துக்கு தமது உழைப்பை விற்பவர்களில் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள தருமபுர மக்களும் ஒருபகுதியினர். இவர்களது நாளாந்தக் கூலி மூன்று ரூபாவாகும். 1958ம் ஆண்டு இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு தருமபுர பகுதியில் எந்தவித வசதியுமில்லாமல் குடியேற்றப்பட்டுள்ள இவர்கள் முன்னுள் எம். பி. ஒருவருக்கும், ஒரு உயர்தர அரசாங்க அதிகாரிக்குப் ஏற்பட்ட பதவிப் போட்டியில் பிரஜா உரிமையும் பறிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்களில் அநேகருக்கு வாக்குரிமையும் கிடையாது. இதனுல் இவர்களைச் சுரண்டிச் சூறையாடும் பெரும் காணிச் சொந்தக்காரர்களுடைய அரசியல் பிரதிநிதிகளான தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சியினரோ அல்லது வேறு கட்சியினரோ இவர்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை.

சென்ற வருடம் ஜுலை மாதம் கிளிநொச்சியில் நடைபெற்ற புரட்சிகர விவசாயிகள் மாநாட்டில் 'கூலி விவசாயிக்குக் கூலி உயர்வு வேண்டும்' என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக் கோரிக்கையைச் சுற்றி இப் பகுதியில் உள்ள பெருந் தொகையான கூலி விவசாயிகள் அணிதிரண்டனர். அவர்களில் பிரதானமானவர்கள் தருமபுர உழைப்பாளி மக்கள்.

ஒரு நாள் வாழ்க்கைக்கு ஒரு குடும்பத்றுக்கு 9 ரூபா வரையில் தேவை என்று அரசாங்க இலாகாவே கூறுகையில் தருமபுர மக்கள் 3 ரூபாவுடன் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? மிகவும் வறுமையிலும், துன்பத்திலும், அல்லலுறும் இம் மக்கள் இதன் காரணமாக கடந்த மாதம் 30ந் திகதி தொடக்கம் கூலி உயர்வுகோரி -அதாவது ஒரு நாளுக்கு மிகக் குறைந்த சம்பளமான 4 ரூபா கூலி கோரி போராடுகின்றனர். கடந்த 30ம் திகதியிலிருந்து இவர்கள் ஒருவராயினும் வேலைக்குச் செல்லாது வேலை நிறுத்தம் செய்கின்றனர். இவர்களது கோரிக்கையைப் பலர் ஆதரிப்பதுடன், அகில இலங்கை விவசாய சம்மேளன கிளிநொச்சி மாவட்டக் கமிட்டியும் கம்யூனிஸ்ட் கட்சியும் உறுதியாக ஆதரித்து நிற்கின்றன. போராட்டம் வெற்றிபெற அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் தருமபுர உழைப்பாளி மக்கள் தயாராக உள்ளனர்.

# முதலாளித்துவ கலை இலக்கியத்தை நிராகரிக்க வேண்டும்

இரண்டும் வர்க்கங்களின் நலன்களுக்குச் சேவை செய்யக் கூடிய கலை இலக்கியம் மக்கள் கலை இலக்கியமாகாது. ஆதலால் இதனை முற்றாக மக்கள் நிராகரிக்க வேண்டும். முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் படைக்கப்படும் கலை இலக்கியங்கள் பாடுபடும் வெகு ஜனங்களின் உணர்வுகளை திசை திருப்பி, அவர்களின் மனப்போக்கை முதலாளித்துவ, பிற்போக்கு வாழ்க்கை நெறிக்கு, பக்குவப்படுத்தும் பண்புவாய்ந்தவை. கலாச்சாரத் துறையில் இத்தகைய கலை இலக்கியங்கள் ஊடுருவிச் செல்வாக்கு வகித்த போதிலும் அதனை எதிர்த்துப் போராட வேண்டும். பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்துடன் படைக்கப்படும் கலை இலக்கியங்கள்தான் இந்தப் போராட்டத்தைச் செம்மையாகவும், உறுதியாகவும் நடத்த முடியும்.

இவ்வாறான கருத்துக்கள், கடந்த மார்ச் 22ந் திகதி நடந்த நீர்வை பொன்னையனின் ''உதயம்'' ஆய்வரங்கில் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கிய அனைவரும் ஏகோபித்த முறையில் கூறினர்.

கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் நடந்த இவ் ஆய்வரங்கில் பலதுறையில் உள்ளோரும் கணிசமான அளவு கலந்து கொண்டனர். ஆய்வரங்கில் தொழிலாளரும், மாணவரும், இதர வாசகரும் தமது கருத்துக்களை வழங்கியது குறிப்பிடத் தக்கதாகும்.

கருத்தரங்கில் பேசிய அனைவரும் இன்றைய பூர்ஷுவா கலை இலக்கியங்களை காரசாரமாக விமர்சித்து நிராகரித்தனர். சகல பிற்போக்கு பத்திரிகைளும், சஞ்சிகைகளும் முதலாளித்துவ நசிவுக் கலாச்சாரத்தையே பரப்புவதாய்க் குற்றஞ்சாட்டினர். மக்களைக் கேவலமாகக் கருதி, அவர்களுக்குத் தமது கேடுகெட்ட கலாச்சார அபினைப் பருக்கி அதில் மயங்க வைக்கப் பார்க்கின்றனர் என சாடினர். உண்மைக்குப் புறம்பான காதல் கதைகளையும், வெறும் கற்பனாலங்காரங்களையும், காமச் சுவையை ஊட்டும் எழுத்துக்களையும் படைத்து இளஞ்சந்ததியினரை நாசப்படுத்துகின்றன என்றும், இன்றைய சினிமாப் படங்கள், நாடகங்கள் கூட இந்தச் சீரழிவுவேலையில் தமது கைவரிசையைச் சளைக்காமல் காட்டுகின்றன என்றும், எனவே, இந்தத் தீமையை எதிர்த்து சகல முற்போக்காளரும் தீவிரமாகப் போராட வேண்டும் எனவும் குரல் எழுப்பினர்.

கலை இலக்கியத்தில் அரசியல் இருக்கக்கூடாது என்று இந்த பூர்ஷுவா ஆசாமிகள் கூச்சல் போடுவதையும் காரசாரமாகக் கண்டித்தனர். இப்படியான கூச்சல்கூட ஒரு அரசியல்தான். முதலாளித்துவ, பிற்போக்குவாதிகள் தமது அரசியல், வர்க்க சமுதாய வாழ்க்கையின் பொட்டுக்கேடுகளை அம்பலப்படுத்துவதையும், தொழிலாளர்களும், விவசாயிகளும், ஏனைய உழைக்கும் வெகுஜனங்களும், முற்போக்கு மாணவரும், புரட்சிகர வாலிபரும் தமக்கு எதிராகக் கிளம்புவதையும் விரும்புவதில்லை.

...கும், வர்க்கங்களுக்கும் அப்பாற்பட்டு கலை இலக்கியம் இருக்க முடியாது.

இந்தக் கண்ணோட்டம் பாட்டாளி வர்க்கப் படைப்பாளிகளுக்கு தெளிவாக இருக்கிறது. கலை இலக்கியம் பாட்டாளி வர்க்கத்துக்கும், ஏனைய வெகுஜனங்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்பதில் அவர்களுக்கு எவ்வித மயக்கமும் இல்லை. ஆதலால் தான்

அது தேசிய இலக்கியமாகிட முடியாது. இந் நாட்டின் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவப் பண்பாடுகளைச் சித்தரித்தாலும் அது தேசிய இலக்கியமாகிட முடியாது. உண்மையான தேசிய இலக்கியம் இந் நாட்டு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை, உழுத்துப் போன நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு உணர்வைச் சித்தரிக்க வேண்டும். சகல இன மக்களின் வர்க்க ரீதியான ஒருமைப்பாட்டையும். ஒரே இன மக்கள் மத்தியில் உள்ள வர்க்க

பான-பிற்போக்கான அபத்தங்களையெல்லாம் தேசிய இலக்கியம் என்று கூறும் தவறான போக்கு முன்னர் இருந்தது. 1956க்குப் பிறகு எழுந்த கலை இலக்கிய விழிப்புணர்ச்சிக்குச் சரியென தத்துவார்த்த வடிவமும், கண்ணோட்டமும் கொடுக்கப்படாமல் - விளக்கப்படாமல் பலவித மயக்கங்களும், தவறான கருத்துக்களும் ஈழத்து எழுத்தாளர் மத்தியில் நிலவின. ஆனால், இன்று பல எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் சரியான கண்ணோட்டம் எழுந்துள்ளது. சகல தேசிய இனங்களிலேயேயும் வர்க்க ஒருமைப்பாடு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான புதிய

## பாட்டாளிவர்க்கத்துக்கு சேவை செய்யும் படைப்புகளை வரவேற்க வேண்டும்

தங்களால் வெகுஜனங்கள் சுரண்டப்படுவதையும், அதனால் விளையும் கேடுகளையும், இவற்றை எதிர்த்து மக்கள் போராடுவதையும் சித்தரித்தால் — இத்தகைய கலை இலக்கியங்களை வெளியிட்டால் அவை தங்களுக்கு பாதகமாக அமையும் என சுரண்டும் வர்க்கங்களைச் சேர்ந்தோர் எண்ணுகின்றனர். அதனால் தான் ''கலை இலக்கியத்தில் அரசியல் கூடாது'' என கூச்சல் எழுப்புகின்றனர். அதே சமயம், தமது கலைஞர்களும், எழுத்தாளர்களும் காந்தீயத்தையும் இதர முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசியலையும்

அவர்கள் அத்தகைய கலை இலக்கியங்களைப் படைக்கின்றனர். நீர்வை பொன்னையனின் உதயம் சிறுகதைத் தொகுதி அவ்வாறான கலை இலக்கியப் படைப்பே. இதனைக் குறித்து பெருமை அடையலாம்.

இவ்வகையான கருத்துக்கள் ஆய்வரங்கில், கலந்து கொண்டோரின் உரைகளில் பொழிந்து கிடந்தன.

உதயம் சிறுகதைகளை ஆராய்ந்த அவர்கள் அக் கதைகள் எவ்வாறு வர்க்க முரண்பாடுகளையும், போராட்டங்களையும் சித்தரிக்கின்றன எனச் சுட்டிக்காட்டினர். போராடும்

ரீதியான ஒருமைப்பாட்டையும் அபிலாஷகளையும், எண்ணங்களையும் சித்தரிக்க வேண்டும். உதாரணமாக, மலைநாட்டுத் தொழிலாளர்களின் ''போராட்டத் தீ'' எனும் பாடல்கள் வடக்கே ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் ஏனைய புரட்சிகர, முற்போக்கு மக்களிடமும் பிரபல்யமாகியுள்ளன. அங்கே அப்பாடல்களை அவர்கள் பாடுகிறார்கள். அதே போன்று மலைநாட்டுத் தொழிலாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களைச் சித்தரிக்

ஜனநாயக உணர்வு, புரட்சிகர மனப்பாங்கு வெகுஜனங்களின் நியாயமான அபிலாஷைகள், நிலவுகின்ற அரசியல், வெகுஜன-வர்க்கப் போராட்டங்கள் ஆகியற்றை உள்ளடக்கமாகவும், சிதைவுபெறாத வடிவங்களையும் கொண்டதுதான் உண்மையான-புரட்சிகர தேசிய இலக்கியம். இத்தகைய கலை இலக்கியங்களைப் படைப்பதுதான் நமது எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் ஆகியோரின் கடமை.

தேகிய இலக்கியம் பற்றி ஆய்வரங்கில் கூறப்பட்ட இத்

## ''உதயம்'' ஆய்வரங்கில் வெளியான சில கருத்துக்கள்

கலை இலக்கியத்தில் காட்டினால் அதனை இவர்கள் எதிர்ப்பதில்லை. பதிலுக்குப் பாராட்டுகிறார்கள். 'சிறந்த கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள்'' என இவர்களால் போற்றப்படும் பூர்ஷுவா கலை இலக்கியக்காரர்கள் கூட தமது படைப்புகளில் தாராளமாக பூர்ஷுவா அரசியலுக்கும், அதன் நீதி-நெறி கோட்பாடுகளுக்கும், கலாச்சாரங்களுக்கும்இடமளித்து, அவற்றை நியாயப்படுத்தி எத்தனையோ படைப்புகளை ஆக்கியுள்ளனர். அதே சமயம், நீர்வை பொன்னையனைப் போன்ற முற்போக்கு எழுத்தாளர்கள் தமது படைப்புகளில் பாட்டாளி வர்க்க வெகுஜன அரசியலை, அவர்களின் பேராட்டங்களை நியாயப்படுத்தி சித்தரித்தால் மட்டும், இது அரசியல் பிரச்சாரம் என்று கூச்சல் போடுகின்றனர். கலைப்பண்பு கெட்டுவிட்டது என்று ஓலமிடுகின்றனர்.

இன்றைய வாழ்க்கையில் அரசியல் கலக்காதது ஒன்றுமில்லை. ஒரு வர்க்கத்தின் — அவ்வர்க்க சமுதாயத்தின் அரசியல் வெளிப்பாடுதான் கலை இலக்கியம். அரசியலுக்

மக்களின் புரட்சிகர உணர்வையும், அவர்களின் திட்சண்யப் போக்குகளையும், உண்மைக்குப் புறம்போகாமல் யதார்த்த வடிவத்துடனும், கலைநயத்துடனும் சித்தரிக்கின்றன என்பதை கதைகளிலிருந்து மேற்கோள் காட்டினர். சிலகுறைபாடுகள் இருந்த போதிலும் மொத்தத்தில் இக் கதைகள் வரவேற்கத்தக்க படைப்புகள் எனவும், அதற்காக நீர்வைப் பொன்னையனைப் பாராட்டுவதாயும் கூறினர்.

கதைகளை ஆய்வுரை நிகழ்த்தியவர்கள் தேசிய இலக்கியம் பற்றிய சரியான கருத்துக்களை முன்வைக்கவும் தவறவில்லை. தேசிய உடைகளையும், நாட்டு மொழி வழக்குகளையும், சம்பிரதாயங்களையும் மையமாகக் கொண்டிருந்தால் மட்டும் அது தேசிய இலக்கியமாகி விடாது. அல்லது, ஒரு கதை இலங்கையின் எல்லா ஊர்களிலும் நிகழ்வதாலோ, பல இன மக்களிடையே கலப்புத் திருமணங்களை நடத்திவைப்பதாலோ

கும் பாடல்களை தாங்களே இயற்றிப் பாடுகிறார்கள். இது தான் தேசிய இலக்கியம். ஈழத்தவர் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக நம் நாட்டவர் எழுதியவற்றையெல்லாம், குப்பை கூழங்களையெல்லாம், யதார்த்தத்துக்குப் புறம்

தகைய கருத்துக்களை இலக்கியத்துறையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறந்த விழிப்பை நன்கு எத்துக் காட்டுகிறது.

சுருங்கச் சொன்னால் உதயம் ஆய்வரங்கில் பயனுள்ள கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

-அவதானி


விற்பனையாகிறது

நீர்வை பொன்னையனின்

உதயம்

சிறுகதைத் தொகுதி

விலை: ரூ. 2.00

கிடைக்குமிடம்:
தொழிலாளி பிரசுராலயம்
121, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.

# நெசவுத் தொழிலாளருக்கு சம்பளவுயர்வு

நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பயிற்சிபெற்ற சகல தொழிலாளர்களுக்கும் ஆண்-பெண் வித்தியாசமின்றி நாளொன்றுக்கு ஆகக் குறைந்த சம்பளம் ரூ. 5-80 சதமாக இருக்கவேண்டும் என்ற தீர்மானத்தை இத்தொழில் சம்பந்தமான சம்பள நிர்ணய சபை நிறைவேற்றியுள்ளது. இதனால், சகல தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு கிடைத்துள்ளது.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் தோழர் சண்முகதாசன் இத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். நாளொன்றுக்கு ரூ. 8 00 சம்பளம் அளிக்கப்படவேண்டும். என்ற தீர்மானத்தை அவர் முதன் முதலாகக் கொண்டு வந்தபோதிலும், நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர் என்ஜீனியரிங் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய ஆகக் குறைந்த சம்பளமான ரூ 5-80 சதத்துடன் இவர்களின் சம்பளமும் ஒத்துப் போகவேண்டும் என்பதனால் தனது தீர்மானத்தைத் திருத்தி புதிய தீர்மானத்தை சம்பள நிர்ணய சபையில் சமர்ப்பித்தார்.

இத் தீர்மானத்துக்கு ஆதரவாக ஆறுபேரும் எதிராக நான்குபேரும் வாக்களித்தனர்.

நால்வர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. எனினும் தீர்மானம் நிறைவேறியது.

ஆகக் குறைந்த சம்பளம் நாளொன்றுக்கு ரூ. 4-00 ஆக இருக்கவேண்டும் என்ற திருத்தத் தீர்மானம் ஒன்றை முதலாளிகளின் பிரதிநிதிகள் கொண்டு வந்தார்கள். இவர்களின் முயற்சி தோற்கடிக்கப்பட்டது. ஆறுபேர் எதிர்த்து வாக்களித்தார்கள். இருவர் ஆதரித்தனர்.

இத் தீர்மானத்தின்படி பயிற்சியற்ற தொழிலாளி ஒருவருக்கு ஆண்-பெண் வித்தியாசமின்றி நாளொன்றுக்கு ஆகக்குறைந்த சம்பளம் ரூ. 5-80சதம் கிடைக்கும். இத்தோடு நாணய மதிப்பிறக்க அலவன்சாக 40 சதமும் கைத்தொழில் கோர்ட் அளித்த 8 சதமும் கிடைக்கும். எனவே ஒரு தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ. 6-28 சதம் சம்பளம் கிடைக்கும்.

இத் தீர்மானம் அமுலாக்கப்படும்போது, வெள்ளவத்தை நெசவாலையில் உள்ள ஆண் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு 1-20சதம் சம்பள உயர்வும், பெண் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ. 1-90 சதம் சம்பள உயர்வும் கிடைக்கும். ஏனைய நெசவுத் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கு இவற்றிலும் பார்க்க கூடிய சம்பள உயர்வு கிடைக்கும்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் அண்மையில் வென்றெடுத்த வெற்றிகளில் இதுவும் ஒன்றாகும்.

◎ 3ம் பக்கத் தொடர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துக்குள்ளும் எழுந்த கடுமையான தத்துவார்த்தப் போராட்டத்தின் போது தோழர் குலவீரசிங்கம் மாசேதுங் சிந்தனையில் வழிநடத்தப்படுகின்ற புரட்சிகர சக்திகளின் பக்கத்தில் தளராது உறுதியுடன் நின்றார். இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமை மாாக்சிஸ்ட்—லெனினிஸ்டுகளின் கையில் இருப்பதற்காக அவர் முக்கிய பாத்திரத்தை வகித்தார். நவீன திரிபுவாதிகளின் கண்சாடை அவரது உறுதியைக் குலைக்க முடியவில்லை.

தோழர் குலே 20 ஆண்டுகளுக்குமேலாக தொழிலாளி வர்க்கத்துக்குச் சேவையாற்றினார். அவர் மனப்பூர்வமாக அதனைச் செய்தார். தனது முழு வாழ்வையும் புரட்சிகர இயக்கத்திற்கு அர்ப்பணித்தார். தனது குடும்ப நலன்களையும் விட தொழிலாளி வர்க்க லட்சியத்தையே முன்னுக்கு வைத்தார். அவரது வாழ்வை நாம் அனைவரும் உதாரணமாகக் கொள்ளவேண்டும்.

''எல்லோரும் இறக்கவேண்டியவர்கள்தாம். ஆனால், இறப்பு என்பது அதன் முக்கியத்துவத்தில் வேறுபட்டது. ஒரே மாதிரி எல்லோருக்கும் மரணம் ஏற்பட்டாலும், அது தை மலையைவிட பாரமானதாக இருக்கலாம், அல்லது இறகைவிட இலேசானதாக இருக்கலாம் என்று ஸமோசியென் என்ற புராதன சீன எழுத்தாளர் கூறினார். மக்களின் நலனுக்காக மரணமடைவது தை மலையைவிட பாரமானது. ஆனால் பாசிஸ்டுனுக்காக உழைத்து, சுரண்டுவோருக்கும் ஒடுக்குமுறையாளருக்குமாக இறப்பது இறகைவிட இலேசானது'' என மாசேதுங் கூறியுள்ளார்.

தோழர் குலவீரசிங்கம் தொழிலாளி வர்க்கத்துக்குச் சேவை செய்து மரணமடைந்தார். அதனால்தான் அவரது மரணம் நமக்குப் பாரமாகத் தெரிகிறது எந்த லட்சியத்துக்காக அவர் தனது வாழ்நாளை அர்ப்பணித்தாரோ அதற்காக கடுமையாக உழைப்பதன் மூலமே நாம் அவருக்கு அஞ்சலி செய்ய முடியும்.

◎ 1-ம் பக்கத் தொடர்

மண்டபத்தில் நான்குபுறமும் மலர்களாலும், மலர்வளையங்களாலும். சூழப்பட்டிருந்த மேடையில் தோழர் குலவீரசிங்கத்தின் பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏராளமான தொழிலாளர்களும், நண்பர்களும், தோழர்களும், பொதுமக்களும் திரண்டுவந்து தமது தோழருக்கு கண்ணீர் மல்க இறுதி வணக்கம் செய்தது தோழர் குலவீரசிங்கம் பாட்டாளி வர்க்கத்துக்கு தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிய மேன்மையை எடுத்துக்காட்டியது.

சரியாக மாலை 4 மணிக்கு, ஒரு தோழர் செங்கொடியை தாழ்த்திப் பிடித்துவர, பின்னால் நூற்றுக்கணக்கான மலர் வளையங்களை இருபகுதியாக அணிவகுத்து தோழர்கள் எடுத்துவர, அடுத்து, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசனும் மற்றும் தலைவர்களும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் வொட்சன் பெர்ணந்தும் மற்றும் தலைவர்களும் அணிவகுத்து வர, செங்கொடி போர்த்திய தோழர் குலவீரசிங்கத்தின் சடலம் வைக்கப்பட்ட பெட்டியை தோழர்கள் இருபுறமும் சுமந்துவர, ஏராளமான தொழிலாளர்களும், தோழர்களும், நண்பர்களும், பொதுமக்களும், பந்துக்களும், தொடர ஊர்வலம் மெதுவாக நகர்ந்து மாலை 5-30 மணிக்கு பொரளை மயானத்தை அடைந்தது.

அங்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் என். சண்முகதாசனும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் தோழர் வொட்சன் பெர்ணந்தும், இலங்கை செங்கொடி வாலிபர் சங்க சம்மேளனத்தின் சார்பில் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்காவும், இலங்கை-அல்பேனிய நண்பர்கள் சங்கத்தின் சார்பில் திரு கரணகொடை அவர்களும் உரையாற்றினர்கள்.

தன் வாழ்நாள் பூராவையும் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கும், அவர்களின் அரசியல் ஸ்தாபனமான கம்யூனிஸ்ட்கட்சிக்கும் அர்ப்பணித்ததோழர் குலவீரசிங்கத்தின் சடலம் சிதையிடப்பட்டாலும், அவரது நினைவு தொழிலாளர்களினதும் கட்சித் தோழர்களினதும் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

## நன்றி

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொருளாளர் தோழர் கே. குலவீரசிங்கம் காலமானதையிட்டு அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர்வளையங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும் அவரது இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்

## அன்னு லூயி ஸ்ரோங் ஞாபகார்த்தமாக

புரட்சிகர பத்திரிகையாளரான திருமதி அன்னு லூயி ஸ்ரோங் தனது 84 வது வயதில் காலமானர் என்ற செய்தியைக் கேட்டு நாம் ஆழ்ந்த துயரில் மூழ்குகின்றோம்.

ஆன்னு லூயி ஸ்ரோங் கடந்த பல வருடங்களாக சீனுவில் வாழ்ந்து வந்தார். இருதய நோயின் காரணமாக அவர் பீகிங்கில் காலமானர். அவர் இறப்பதற்கு முன்னர் பிரதமர் சௌ என்-லாய் உட்பட ஏனைய சீனத் தலைவர்களும் பீகிங்கில் உள்ள பல வெளிநாட்டு நண்பர்களும் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவரைப் பார்த்தனர்.

அன்னுலூயிஸ்ரோங் அமெரிக்காவிலுள்ள ஃபிரண்ட், நெப்ரஸ்காவில் 1885ம் ஆண்டு பிறந்தார். அவர் தமது இளம் வயதிலேயே அரசியலில் ஈடுபட்டு, முதலாவது உலக யுத்தத்தின் போது நடந்த பிரசித்தி பெற்ற சியாட்டில் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றினர். அவ் வேலைநிறுத்தம் தோல்வியுற்றது. அதனால் மனம் தளர்ந்திருந்த அவர், தோழர் லெனின் தலைமையில் நடந்த மகத்தான ஒக்டோபர் புரட்சியின் வெற்றியினல் உந்தப்பட்டு, அவ் வெற்றிக்கான காரணங்களை தானே நேரில் சென்று அறியும் நோக்கத்துடன் உலகின் முதலாவது சோஷலிஸ பூமியில் காலடி வைக்கத் தீர்மானித்தார்.

அன்னு லூயி ஸ்ரோங் சோவியத் யூனியனுக்கு 1921 ல் முதன் முதலாகச் சென்றார். வால்காப் பிரதேசத்தில் பட்டினியால் பரிதவித்த மக்களுக்கு, அமெரிக்க நண்பர்கள் அளித்த நிவாரண உதவியை எடுத்துக்கொண்டு சோவியத் நாட்டுக்குச் சென்ற அவர், அங்கு தங்கியிருந்து, பின்னடைந்த நாடாக இருந்த ருஷ்யாவை நவீன வல்லரசாக மாற்றிய சோஷலிஸ நிர்மாணத்தை நேரடியாகக் கண்டார். அவர் தானே ஸ்தாபித்து, ஆசிரியராக கடமையாற்றிய ''மாஸ்கோ செய்திகள்'' என்ற பத்திரிகையில் தான் நேரில் கண்டவற்றை, கேட்டவற்றையெல்லாம் எழுதிக் குவித்தார். பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் அவர் ஒரு தடவை ஸ்டாலினையும் சந்தித்தார். ''ஸ்டாலின் சகாப்தம்'' என்ற தனது பிரசித்தி பெற்ற நூலில் இச் சந்திப்பை என்றுமே மறக்க முடியாத சொல்லோவியமாக விபரித்துள்ளார் அன்னு லூயி ஸ்ரோங்.

சோவியத் தலைவர்களில் ஒருவரான சேர்ஜி கிரோவ் படுகொலை செய்யப்பட்ட பின்னர், எதிர்ப் புரட்சிக்காரர்களுக்கு எதிராக நடந்த பிரசித்திபெற்ற விசாரணையின் போது அன்னு லூயி ஸ்ரோங் ரஷ்யாவில் வாழ்ந்தார். ஸ்னேவீவ், காமனீவ், புக்காரின் மற்றும் பலருக்கு எதிராக நடந்த இவ் விசாரணையின்போது நீதிமன்றத்தில் அதனை அருகில் இருந்து கவனித்ததோடு, அவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களையும் தன் காதுகளாலேயே கேட்டார்.

யுத்தம் வெடித்த போதும், சோவியத்-பின்லாந்து யுத்தத்தின்போதும், மன்னர் ஹீம் எல்லையை நிர்மூலமாக்கிய போதும், லாத்வியா, லித்துவேனியா எஸ்தோனியா ஆகியவற்றை கைப்பற்றும் ஹிட்லரின் திட்டத்தை சோவியத் செஞ்சேனை நிர்மூல மாக்கிய போதும் அன்னுலூயி ஸ்ரோங் ரஷ்யாவில்தான் வாழ்ந்தார். போலந்து விடுதலையாக்கப்பட்டதையும், செஞ்சேனை பெர்லினை இறுதியாகக் கைப்பற்றியதையும் அவர் கண்டார்.

யுத்தத்துக்குப் பின்னர் அவர் சீனத்துக்கு விஜயம் செய்து 1947ல் யெனனுக்குச் சென்றார். தோழர் மாசேதுங் இவருக்கு அளித்த பேட்டியின்போதுதான் ஏகாதிபத்தியவாதிகளும், சகல பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகள்என்ற தீர்க்கமான கருத்தைக் கூறினர். அன்னு லூயி ஸ்ரோங் பல சீனத் தலைவர்களையும் சந்தித்தார்.

1949ல் சோவியத் நீதிபதியொருவரின் பிழையான தீர்ப்பினல் அவர் ஒற்றர் என குற்றஞ்சாட்டப் பட்டு, சோவியத் யூனியனிலிருந்து நாடு கடத்தப்பட்டார். இதனுல் அவர் மனமுடையவில்லை. 1955ல் அவர் நிரபராதியென சோவியத் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அன்னு லூயி ஸ்ரோங் திரும்பவும் சோவியத் யூனியனுக்குச் சென்றபோதிலும், புதிச சீனத்தின் ஆகர்ஷிப்பிலிருந்து அவரால் விடுபட முடியவில்லை. எனவே, சீனத்திலேயே தங்கிவிட தீர்மானித்தார். அவர் சீனத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்று பார்த்து சீனப் புரட்சியின் ஒவ்வொரு அம்சத்தையும் பற்றி எண்ணற்ற கட்டுரைகள், புத்தகங்கள் மூலம் இப் பரந்த உலகுக்கு எடுத்துக் கூறினர். உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அவரது இறுதிக் காலத்தில் ''சீனக் கடிதங்கள்'' என்ற மாதாந்த சஞ்சிகை ஒன்றை வெளிநாட்டு நண்பர்களுக்காக நடத்தினர்.

அன்னுலூயி ஸ்ரோங்,இன்றைய புரட்சிகரபத்திரிகையாளர் என்ற பெயரை தனக்கு ஏற்படுத்திக்கொண்டார். சோவியத் யூனியன், சீனவைப்பற்றி பதினைந்து புத்தகங்களுக்குமேலாக அவர் எழுதியுள்ளார். ''ஒரு உலகிலிருந்து (முதலாளித்துவ உலகிலிருந்து) மற்றொரு உலகுக்கு (சோஷலிஸ உலகுக்கு) செல்கின்றேன்'' ''அதனை சோவியத் எதிர்ப்பார்த்தது'' ''சோவியத் யூனியனிலுள்ள மக்கள்'' ''சீன மக்கள் சீனத்தை வெற்றிக்கொள்கிறார்கள்'' ''காட்டாறு'' ''ஸ்டாலின் சகாப்தம்'' ''திபேத்திய சந்திப்புகள்'' போன்றவை அவற்றுள் சில.

1965ல் அன்னு லூயிஸ்ரோங்சிங் 80 வது பிறந்த தினத்தை ஒட்டி மாசேதுங் அவளுக்கு அளித்த விருந்து, அவருக்கு அதற்குமுன் கிடைக்காத மாபெரும் கௌரவமாகும்.

சகல புரட்சியாளர்களும், குறிப்பாக சீன நண்பர்களும் அவரின் மரணத்துக்காக துயரப்படுகிறார்கள்.


## மே தினத்தன்று

**கொழும்பு புதிய நகர மண்டபத்தில்**
**மாலை 4 மணிக்கு**

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்**

**புரட்சிகர செய்தியைக் கேளுங்கள்**

**கூட்டத்திற்கு முன்பு ஊர்வலம் உண்டு.**
**விபரங்கள் பின்னல் அறிவிக்கப்படும்.**

**ரூ. 1.00 நிதி டிக்கட் வாங்கி**

**மேதின நிதிக்கு உதவுங்கள்**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்
இலங்கை செங்கொடி வாலிபர் சம்மேளனம்
அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்


◎ 1-ம் பக்கத் தொடர்

ஒவ்வொன்றை ஆதரித்தன. மந்திரிசபையிலுள்ள அதிக பலம் வாய்ந்த கோஷ்டியின் நெருங்கிய நபர் ஒருவரை இலங்கைப் பிரதிநிதியாக நியமித்ததன் மூலம் யூகோஸ்லாவியா ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்டது. தோல்வியடைந்தவர்கள் கைகட்டிக் கொண்டு சும்மா இருக்கவில்லை. பொதுத் தேர்தலில் யு. என். பி. வெற்றி பெற்று ஆட்சிக்கு மறுபடியும் வந்தால், யூகோஸ்லாவிய கம்பெனியின் இலங்கையின் உள்ள துணை ஒப்பந்தக்காரரான இலங்கை என்ஜீனியரிங் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒப்பந்த வேலையைப் பறித்து, பிரெஞ்சுக் கம்பெனியின் இலங்கையில் உள்ள துணை ஒப்பந்தக்காரருக்கு வேலை பாரமளிக்கப்படும் என செய்திகள் அடிபடுகின்றன. யார் அதிகம் கமிஷனைப் பெறுவது என்பதில்தான் இந்த இழுபறி நடைபெறுகிறது.

மகாவலி திட்டத்தை சோஷலிஸ நாடொன்றுக்குத்தான் கொடுத்துள்ளோம். இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைக்க ஏகாதிபத்தியவாதிகள் எடுக்கும் சதிகளுக்கு நாங்கள் துணைபோகவில்லை என யு. என். பி. பாசாங்கு செய்த போதிலும், அது மக்களின் கண்களில் மண்தூவ முடியாது. அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் அளிக்கின்ற பிராணவாயுவின் உதவியுடன் தான் யூகோஸ்லாவியா காலத்தைத் தள்ளி வருகிறது. யூகோஸ்லாவியாவுக்குக் கொடுத்துள்ள ஒப்பந்தம் அமெரிக்க, பிரிடிட்டிஷ் கம்பெனிகளுக்குக் கொடுத்த ஒப்பந்தம் போன்றதே.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2